உ

ஸ்ரீமன்மஹாகணாதிபதயே நம:

திருவேங்கடநாதர் அருளிச்செய்த

# கீதாசாரத்தாலாட்டு

## மூலமும்,


தஞ்சைமாநகரம்

ஸ்ரீ பிரஹ்ம நிஷ்டபண்டித

வெ. குப்புஸ்வாமிராஜு அவர்கள்

என்னும் பூர்வாசிரமநாமம்பூண்ட

ஸ்ரீலஸ்ரீ பிரஹ்மாநந்தஸ்வாமிகள்

மாணாக்கருள் ஒருவராகிய

ஸ்ரீலஸ்ரீ

இராமஸ்வாமிஐயா அவர்கள்

இயற்றிய


பதஉரையும், குறிப்புரையும்.


இரண்டாம் பதிப்பு.

தஞ்சை

ஸ்ரீ சங்கர விலாஸ சாரதா மந்திரம் பிரஸ்,



Copy Right Registered.



இதன் விலை] 1925. [அணா 6.



அறுசீராசிரியவிருத்தம்.

ஐவகைப் பொருளு நான்கு கரணமுங்குணங்கள் மூன்றுஞ்
செய்வினை யிரண்டு மொன்றி யாவருந் திகைப்ப நின்ற
பொய்யிரு ளகல ஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள்
கைவளை யாழிச் செங்கட் கண்ணனைக் கருத்துள் வைப்பாம்.

# முகவுரை

THE TANJO… * TANJORE.

சர்வலோகநாதனும், மறைநெறிவழா[illegible] பாண்டவர் சகாயனும், சர்வஞ்ஞனுமான ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா, வில்வலனை காண்டீபனுக்கும், அவனுக்குப் பிற்பட்டவுலகினர்க்கு நன்மையுண்டாமாறு கருதித், திருவாய்மலர்ந்தருளிய பகவற்கீதையின்கண் ணுள்ள கன்மம், பக்தி, ஞானமென்னும் முப்பதார்த்தங்களுள் மிகச்சிறந்ததுஞ் சாரமானதுமான ஞானார்த்தங்களைத் திரட்டிக் கூறுமிந் நூலானது முக்திவேட்கையுற்ற மந்தமதியினர் பலர்க்குஞ் சாலவு முபகாரமா மென்பது எல்லாச் சான்றோருக்கு மொத்த துணிவே.

இஃது ஆத்மாநாத்ம பதார்த்தங்களி னியல்புகளை யதிகப்பிரயாசையின்றி யுணருமாறு செய்விக்கு மோரரிய நூலாம்.

இதில் பந்த மோக்ஷங்களி னியல்பு பற்றியும், ஆத்மா வேகமானால் ஒருசிலர் முத்தர்களாயும் ஒருசிலர் பெத்தர்களாயு மிருப்பது எங்ஙனம் பொருந்து மென்பது பற்றியும், ஜடமான தேகமெங்ஙனங் கன்மத்தை யியற்றி மக்கன்மபலனை யெப்படி யநுபவிக்குமென்பது பற்றியு மெழுந்தனவும் பிறவுமான பல ஆக்ஷேபங்கட்கு மிகவாழ்ந்த கருத்துடையனவாகிய பல சமாதானங்களேற்பட் டிருக்கின்றன.

இது வாசனைவசத்தா லெழும்பி மானங் காரணமாக வுண்டாஞ் சோக மோகங்களையு மவை காரணமாக வுண்டாந் துன்பங்களையும் போக்குதற்குரிய நல் விவேகத்தை யெளிதி லுண்டாக்குவதொன்றாம்.

இஃது இலக்கண விலக்கியங்களி லதிகப் பயிர்ச்சி யில்லாதவர்கட்கு முபகாரமாம்பொருட்டு இதற்குப் பதவுரையுங் குறிப்புரையு மெழுதி வெளியிட்டனம்.

இதிற்பிழைகளுளதாயில்

“குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்”

என்ற தமிழ்மறை மொழிப்படி யவற்றைப் பொறுத்துத் திருத்திப் படித்துக்கொள்வது மன்றித் தெரிவித்தால் மறுபதிப்பிற் றிருத்தி வெளியிடுகின்றோம்.

கு. பா.

ஸ்ரீசங்கரவிலாஸ சாரதாமந்திரம்

தஞ்சை.

உ

## விநாயகர் துதி.

கடம்பொழி துயராங் கடல்கடந் தருள்பெறக்
கடம்பொழி கயந்தலைக் கழல்கரம் பற்றுதூஉம்.

## கந்தன் துதி.

கடம்பணி போலாங் கட்டவிழ்த் தின்புறக்
கடம்பணி வேல ன்கழல்சிரஞ் சூட்டுதூஉம்.

## ஈசுவரன் துதி.

கடநட மாடுங் கரியுரிப் போர்வையன்
கடநட மாடுங் கழல்பணிந் தேற்றுதூஉம்.

## ஈசுவரி துதி.

கடம்படு கல்விற் காவலன் காவின்
கடம்படு தாளைக் கருதுதூஉ நாளும்

## அருளிறைதுதி.

கடம்புகுத் தலல்தருங் கடுநெறி யொருவிக்
கடம்புகுத் தருளிறை கழலுளங் கட்டுதூஉம்.

ஸ்ரீ கணேசாயநம:

திருவேங்கடநாதர்

அருளிச்செய்த

# கீதாசாரத்தாலாட்டு.

## சிறப்புப்பாயிரம்.

ஆக்கியோன் பெயர், நூல்வந்தவழி, நூற்பெயர், நூற்பயன்.

வெண்பா.

மாதையர்கோன் வேதநவில் வாய்வேங் கடநாதன்
காதையுறப் பார்த்தனுக்குக் கண்ணனருள் — கீதைக்
கருத்துயர்தா லாட்டாகக் கட்டுரைத்தான் யாருங்
கருத்துயர்தீர்ந் தெய்தக் கதி.

(இ—ள்.) மாதையர்கோன் = மாதைப்பதியின்கண்ணுள்ளவர்கட்குத் தலைவனாகிய, *க. வேதம் நவில்வாய் = வேதங்களையோதும்நாவினையுடைய, வேங்கடநாதன் = திருவேங்கடநாதனென்னும் பிராஹ்மணோத்தமன், காதையுற = சொற்சுவை பொருந்த, பார்த்தனுக்கு = தனஞ்சயனுக்கு, கண்ணன் அருள் = ஸ்ரீகிருஷ்ணபகவான் திருவாய்மலர்ந்தருளிய, கீதை = பகவற் கீதையினது, கருத்து = அபிப்பிராயத்தினை, *உ. உயர் தாலாட்டாக = மேன்மைபொருந்திய தாலாட்டுப்பிரபந்தமாக, யாரும் = மோக்ஷவிருப்பமுடையோரனைவரும், கருத்துயர்தீர்ந்து = பிறவித்துன்பத்தினின்றும் நீங்கி, கதியெய்த=மோக்ஷத்தையடையும்பொருட்டு, கட்டுரைத்தான் = உறுதியாகக்கூறினான். எ—று.

---

*க. வேதம்நவில்வா யென்றமையின் பிராஹ்மணனென்னும் பதம் விரிந்தது.

*உ. கன்மம் பக்தி ஞானமென்னும் மூன்றனையும் கலந்துகூறிய பகவற் கீதையின் கண்ணுள்ள சாரமான மிகச்சிறந்த ஞானார்த்தங்களைத் திரட்டித் தாலாட்டுப் பிரபந்தமாகக் கூறினமையி னிது கீதாசாரத் தாலாட்டெனப் பெயர்பெற்றது.

## அவதாரிகை.

ஆரியந் தமிழென்னு மிருமொழியினுந் தேர்ந்த திருவேங்கடநாதரென்னும் பெரியார் தாம் கூறப்புகுந்த விந்நூல் இடையூறின்றி இனிதுமுடிதற் பொருட்டும், நூல்கற்கப் புகுவார்க்குத் தம்மிடத்திற்றோற்றும் நாஸ்திகத்தன்மைப் பிராந்தி நீங்கி நூலிற்பிரவிருத்தியுண்டாம்பொருட்டும், நூலின் முதல் இடை கடையென்னு மூன்றிடத்தும் *ந. மங்கலஞ்செய்வது ஆன்றோரொழுக்கமா

*ந. விக்கினத்தினது, நாசத்திற் கநுகூலமான வியாபாரம் **மங்கல**மெனப்படும். **விக்கின** மென்பது பாபத்திற்காம். **வியாபார** மென்பது மனோவாக்குக்காயங்களின் கிரியைக்காம். பாபத்தினால் எந்தச் சுபகாரியமும் முற்றுப்பெறுகிற தில்லை. அப்பாபம் மங்கலத்தால் நாசமாகின்றது. அம்மங்கலமும் வஸ்துநிர்த்தேசரூபம், நமஸ்காரரூபம், ஆசீர்வாதரூபமென்னும் பேதத்தால் மூன்றுவகைப்படும். சகுண அல்லது நிர்க்குணமான பரமாத்மா **வஸ்து** வெனப்படும். அதன் கீர்த்தனமே வஸ்துநிர்த்தேச மெனப்படும்.

அவற்றுள், க. **நிர்க்குணவஸ்து நிர்த்தேசரூபமங்கல**மாவது வியாபகமாயும் சத்தியமாயு மிருக்கின்ற எதன்பிரகாசத்தால் சூரியசந்திரர்கள் பிரகாசிக்கின்றார்களோ, அந்தப் புத்திக்குச் சாக்ஷியாகிய நான், சுத்தஸ்வரூபமாகவும் பூரணாநந்தரூபமாகவும் இருக்கிறேனென்றற்றொடக்கத்ததாம்.

உ. **சகுணவஸ்துநிர்த்தேசரூபமங்கல**மாவது 'சத்தியாய்ச் சிவமாகி' யென்றற் றொடக்கத்துச் செய்யுட்களை யொத்ததாம்.

ந. **நமஸ்காரரூபமங்கல**மாவது 'மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவா' மென்றற் றொடக்கத்துச் செய்யுட்களை யொத்ததாம்.

ச. **ஆசீர்வாதரூபம்** தான் கருதியதைப்பற்றிப் பிரார்த்தித்தல் வடிவம், சிஷ்யன் கருதியதைப்பற்றிப் பிரார்த்தித்தல் வடிவமென விருவகைப்படும். அவற்றுள், க. தான் கருதியதைப்பற்றிப் பிரார்த்தித்தல் வடிவமாவது, 'எந்தச் சக்தியின்பலத்தால் ஈசுவரன் சிருஷ்டிசெய்கின்றாரோ, அந்தச்சக்தி இக்கிரந்தம் முடியும்பொருட்டு எவன்வாக்கிலிருந் தருளுக' என்றற்றொடக்கத்ததாம்.

இ. சிஷ்யன் கருதியதைப்பற்றிப் பிரார்த்தித்தல் வடிவமாவது 'பந்தத்தை நீக்கிச் சுகத்தைக் கொடுத்தருளுந் தீனதயாளுவான **சங்கரன்** இக்கிரந்தத்தைப் படிக்கிறவர்கள் கேட்கின்றவர்களது ஜன்மாதிதுக்கங்களை நிவர்த்தித்தருளுக' என்றற்றொடக்கத்ததாம்.

மென்பதைப் பின்வருபவர்களுக் குபதேசிக்கும்பொருட்டும், தமது வழிபடுகடவுளாகிய ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவைத்துதிக்கின்றார் :—

## காப்பு.

### அறுசீராசிரியவிருத்தம்.

ஐவகைப் பொருளு நான்கு கரணமுங் குணங்கண் மூன்றுஞ்
செய்வினை யிரண்டு மொன்றி யாவருந் திகைப்ப நின்ற
பொய்யிரு ளகல ஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள்
கைவளை யாழிச் செங்கட் கண்ணனைக் கருத்துள் வைப்பாம்.

(இ—ள்.) ஐவகைப்பொருளும் = *ச. ஐந்துவகையாகிய பதார்த்தங்களையும், நான்குகரணமும் = மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்னும் நான்கு அகக்கருவிகளையும், குணங்கள் மூன்றும் = *ரு. சத்துவம் *சு. ரஜசு *எ. தமசென்னு மூன்றுகுணங்களையும், செய்வினையிரண்டும் = முக்கரணங்களாலும், செய்யப்படுகின்ற *அ. நல்வினை *கூ. தீவினையென்னு மிரண்டனையும், ஒன்றி = சிலவற்றை யான் என்றும் சிலவற்றை யெனதென்றும் அபிமானித்து, யாவருந் திகைப்பநின்ற = அஞ்ஞானமுடையாரனைவரும் பிரமிக்கும்படி தோற்றிநின்ற, பொய்யிரு ளகல = *க0. அநிர்வசநீய அஞ்ஞானமாகியஇருள் நீங்கும்படி, ஞானப்பொருட் கதிர்விரித்த = ஞானார்த்தங்களாகிய கிரணங்களைப் பரவச்செய்த, புத்தேள் = தெய்வமான, வளை = பாஞ்சஜந்யமென்

*ச. சத்தாதி, சுரோத்திராதி, வாக்காதி, பிராணாதி, ஸ்தூலசரீர மென்னுமிவையே ஐவகைப்பொருளாம்.

*ரு. இது பிரகாசவடிவினது.

*சு. இது பிரவிருத்திவடிவினது.

*எ. இது மோகவடிவினது.

*அ. வேதத்தில் விதிக்கப்பட்டுள்ள, நித்தியநைமித்திகப்பிராயச்சித்தாதி கன்மங்கள் நல்வினையெனப்படும்.

*கூ. வேதத்தில்விலக்கப்பட்டுள்ள, பிரஹ்மஹத்தியாதிகன்மங்கள் தீவினை யெனப்படும்.

*க0. இன்னதன்மைத்தென்று வுறுதியாகவசனிக்கத்தகாதது அநிர்வசநீயமாம்.

னும் சங்கையும், ஆழி = சுதரிசனமென்னும் சக்கரத்தையுந் தாங்கிய, கை = திருக்கரங்களையும், செங்கண் = சிவந்தவிழிகளையுமுடைய, கண்ணனை = *கக. ஞானசூரியனாகிய ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவை, கருத்துள் = உள்ளத்தினிடத்தே, வைப்பாம் = தியானிப்பாம். (எ-று.)

பொருள்முதலியவற்றில் இரண்டனுருபு தொக்கு நின்றது.

## நூல்.

சீராரும் பரமார்த்த தெரிசனத்தை யருள்செய்யப்
பேராருந் தேசிகராய்ப் பெருமானே, வந்தவரோ (க)

(இ—ள்.) பெருமானே = எங்கள்பெருமானே, சீராரும் = சிறப்புப்பொருந்திய, பரமார்த்த தெரிசனத்தை = உண்மைப்பொருளாகிய ஆத்மஞானத்தை, அருள்செய்ய = தனஞ்சயனுக்குப் போதித்தருளும் பொருட்டு, *கஉ. பேராரும் = பெருமைபொருந்திய, தேசிகராய் = ஆசிரியராக, வந்தவரோ = எழுந்தருளி வந்தவர் நீர்தானோ. (எ-று.)

திருத்தேரிற் சாரதியாய்ச் சேர்ந்திருந்துங் கீதையினா
லருச்சுனற்கு மெய்ஞ்ஞான மனைத்துமுரை செய்தவரோ (உ)

(இ-ள்) *கங. திருத்தேரில் = சிறப்பினையுடைய இரதத்தினிடத்து, சாரதியாய் = தேரூர்பவராய், *கச. சேர்ந்திருந்தும் = அமைந்திருந்தும், கீதையினால் = இனிய இசையோடு கூடிய

---

*கக. அஞ்ஞானத்தை இருளாகவும், ஞானார்த்தத்தைக் கதிராகவு முருவகித்ததற் கேற்பப் பரமாத்மாவைச் சூரியனாகக் கூறினம்.

*கஉ. ஆன்மாவின் உண்மைவடிவத்தைக் காட்டித் துக்கசாகரத்தினின்றுங் கரையேற்றும் பெருமையுடையவர் தேசிக ராதலின், பேராருந் தேசிக ரென்றார்.

*கங. முற்றறிவுடைமைமுதலிய அநந்தகலியாணகுணங்களையுடையபகவானினிதமர்ந்து மேலான ஞானவுபதேசஞ் செய்தற்கு இடமாகவிருந்தமையின், இரதத்திற்குத்திருத்தேரென்னும் விசேடணங்கொடுத்தார்.

*கச. எந்தவித்தை கற்கத்தொடங்கினு மவ்வித்தையைக்கொள்வோன், சந்திப்பிற்குரிய பதார்த்தங்களைக் கரத்திற்கொண்டு, வித்தையைக்

தமது வாக்கியத்தால், அருச்சுனற்கு = விசயனுக்கு, மெய்ஞ்ஞான மனைத்தும் = உண்மைஞான முழுமையும், உரை செய்தவரோ = கிருபைகூர்ந்தருளிய பகவா னீர்தானோ. (எ-று.)

செஞ்சமரிற் பந்துசனஞ் சேதமுறு மென்றிரங்கி
யஞ்சியபார்த் தன்பயமாங் ககற்றவரு ளானோக்கி (௩)

(இ—ள்.) *கரு செஞ்சமரில் = செவ்விதாயபோரில், பந்து சனம் = யுத்தத்திற்குவந்த உறவினரனைவரும், சேதமுறுமென் றிரங்கி = மரண மடைவார்களென் றிரக்கங்கொண்டு, *கசு. அஞ்சிய = பீதியடைந்த, பார்த்தன் = தனஞ்சயனது, பயம் =

கொடுக்கும் ஆசிரியன் சந்நிதியிற் சென்று, வந்தனுதிகளைச் செய்து, அவனமர்ந்திருக்கும் ஸ்தானத்திற்குக் கீழிருந்து, தன்னாலும் பிறராலும் பிறிதொரு கன்மத்திற் செல்லாதவனாய்ச், சித்திரப்பாவையை யொப்பவசைவறவிருந்து கேட்க, கொடுப்போனாய ஆசிரியனும், பிறிதொரு கன்மத்திற் செல்லாதவனாய்க், கேட்பவனைவிட வுன்னத ஸ்தானத்திலிருந்து வித்தையைக் கொடுப்பது முறையாக விருக்க, அம்முறைமாறிக் கொள்வோனாகிய விசயன் கண்டவர்மனமுங் கலங்குதற் கேதுவாயவமர்க்களத்திற் சென்று, பந்துமித்திரர்களாய துரியோதனாதியர்களைக் கொல்லுங்கருத்தா லெழுந்த விசேஷவிரோதமுடையவனாய், உன்னதஸ்தானமாகிய இரதத்தின்க ணமர்ந்திருப்பக், கொடுப்போனாகிய தான் அவனுக்குக் கீழிடத்திருந்து, தானுந் தேரூர்தலாகிய பிறிதொருகன்மத்தை மேற்கொண்டு அவ்விசயனையும் போர்செய்தலாகிய பிறிதொருகன்மத்தை மேற்கொளச்செய்து, வித்தைகளனைத்தினுஞ்சிறந்ததும் மிக்காகசியமானதுமாய பிரஹ்மவித்தையை யுபதேசித்து வீடடைவித்த பகவானிடத் தமைந்திருந்த அளவில்கருணை, அளவிலாற்றல், முற்றறிவுடைமை முதலிய மேம்பட்ட குணங்களை யுணர்த்தலால்சேர்ந்திருந்துமென்பதிலுள்ள வும்மை யுயர்வுசிறப்புப்பொருளதாம்.

*கரு. தர்மசாஸ்திர விரோதமில்லாத யுத்தம் **செஞ்சம** ரெனப்படும்.

*கசு. துரோணர் கிருபர்முதலிய ஆசிரியர்கள், *பீஷ்மர் துரியோதனன் முதலிய நமதுகுலத்தினர், இவர்கட்குச் சகாயமாகவந்த வேனையதேசாதிபதிகளாகிய விவர்களனைவரும், தங்கள் தங்கட்குரிய வின் பலங்களை யிழந்து, நம்மாலிப் போர்க்களத்தில் மரணமடைவார்கள். இவர்கள் மரணமடைவதால் இவர்களாற் காக்கப்பட்டுள்ள

அச்சத்தை, ஆங்கு = அப்போர்க்களத்திலேயே, அகற்ற = நீக்குதற்கு, *கஎ. அருளால் = கிருபையினால், நோக்கி = பார்த்து. (எ-று.)

சுற்றமறிற் சோகமெனச் சொல்லினை சற்றறிந்தவன்போற்
கற்றுணர்ந்தபே ரதனாற் கலங்கார்கா ணென்றவரோ. (௬)

(இ-ள்.) சுற்றம் அறில் = உறவினர் நாசமடைந்தால், சோகமென = (அதனால்) துன்பம் (வந்து பொருந்து) மென்று, *கஅ. சற்றறிந்தவன்போல் = (சாத்திரார்த்தங்கள்) சிறிது

அனைவருந் துன்பமடைவார்கள். அன்றியும், பரம்பரையாக அநுஷ்டித்துவந்த இவர்களது குலதருமங்கெடும். அது கெடவே குலத்தை அநாசார வடிவமான அதர்மமானது தன்வசஞ்செய்யும். அதனால் ஸ்திரீகளனைவரும் வியபிசாரிகளாவார்கள். ஆகவே உலகிற்பொருந்துகின்ற குலமுழுதும் வருணசங்கரமாம். அவ்வருணசங்கரம் அக்குலத்திற் பொருந்தினவருக்கும், குலம் கெடுதற்குக் காரணமாய செய்கையைச் செய்தோருக்கும், கெடாத நரகங் கிடைப்பிக்கும்; அல்லாமலும், முன்னமே சுவர்க்கமடைந்துள்ள விவர்கள் பிதிர்க்களுந் தம்மிடம் வந்துபொருந்தும் பிண்டக்கிரியை சலக்கிரியைகளைச் செய்தற்குரிய புத்திரரைப் பெறுமையின், சுவர்க்கத்தினின்றும் நீங்கி இருண்டநரகில் வீழ்ந்து வருந்துவார்கள். இவ்வநர்த்தங்கட்கெல்லாம் நாமே காரணமாகையால், நம்மைக் குலக்ஷயஞ்செய்ததனாலாந் தோடம் வந்துசேர்ந்து நரகத்தினிடத்துச் செலுத்துமென்னும், இத்தகைய பற்பல வியாகூலசிந்தையாற் பயந்தனனென்பார் **அஞ்சியபார்த்த**னென்றார்.

*கஎ. அருச்சுனன்மூலமாக வுலகினரனைவரும் தங்கள்தங்கட்குரிய தருமங்களைச்செய்து அவற்றின்பயனை யநுபவிக்கும்படிசெய்யுங் கருத்தினராய் அவ்வருச்சுனன் மயக்கத்தா லடைந்திருந்த அச்சத்தினின்றும் நீங்கித் திடஞானியாய்ச் சுதர்மமாய யுத்தத்தை நடத்துமாறு பகவான் கிருபையோடு பார்த்தனரென்பார், **அருளால்நோக்கி**யென்றார்.

*கஅ. துஷ்டநிக்கிரகத்தின் பொருட்டு க்ஷத்திரியன் செய்யுஞ் சுதர்மமாய யுத்தத்தால் நேருங்கொலையாதிகளால் அவனைப் பாபஞ்சாராதென்று சாஸ்திரங்கள் கூறுவதை நன்குணர்ந்த வுனக்கு, அத்துரியோதனாதியர்பால் தற்காலத்தெழுந்த அபிமானவடிவ விரக்கத்தால் அவர்களைக் கொல்லுதலால் பாப முண்டா மென்றும், அதனால்

தெரிந்தவனைப்போல். சொல்லினை = உரைத்தாய், கற்று (கற்க வேண்டியநூல்களைக்) கற்று, உணர்ந்தபேர் = (அறியவேண்டிய அந்நூற்பொருள்களை) அறிந்த பெரியோர்கள், அதனால் = உறவினர்க்கு நேரும் கேட்டால், *கக. கலங்கார் = அஞ்சமாட்டார்கள், காணென்றவரோ = நீயதை அறிவாயாகவென்று சொல்லிய பகவானீர்தானோ. (எ-று.)

கலங்காரோ விறப்புவரிற் கற்றுணர்ந்த பேரேனு
மலங்காம னிருக்கும் வகையுரையு மெனவினவ (ரு)

(இ—ள்.) கற்று = (கற்றற்குரியவைகளைக்) கற்று, உணர்ந்த பேரேனும் = (அறிதற்குறியவைகளை) யறிந்த அறிஞர்களாயினும், இறப்பு வரில் = மரணம் வந்தால், கலங்காரோ = கலக்கமடையார்களோ, (அங்ஙனமிருப்பார்களானால் அவ்வறிஞர்களைப் போல) நான் = யானும், மலங்காமல் = கலங்காமல் (அறிவிழத்தலாகிய சோகத்தையடையாது), இருக்கும்வகை = இருக்கத்தக்க வுபாயத்தை, உரையுமென வினவ = திருவாய்மலர்ந்தருள்வீராக வென்று விசயன்கேட்க. (எ-று.)

நானென்பதினீற்றிலுள்ள வும்மைதொக்குநின்றது.

நீயுநானும் புவிமே னிருபர்களு மெய்யுணர்வா
லாயுங்காற் பிறந்திறப்ப தார்க்குமிலை யென்றவரோ (கூ)

---

மீளாத நரகதுன்பமுண்டா மென்று மயங்கிக்கூறினை யென்பார், சற்றறிந்தவன்போற் சொல்லினை யென்றார்.

*கக. சாக்கிராவத்தையின் சொப்பனசுழுத்திகளுக்கும், சொப்பனவத்தையில் சாக்கிரசுழுத்திகளுக்கும், சுழுத்தியவத்தையில் சாக்கிரசொப்பனங்களுக்கும், அபாவங்காணப்படுவதால் இவ் வவத்தைகள் கிளிஞ்சில்வெள்ளி, கானல்நீர் முதலானவற்றைப்போல் பொய்யென்றும், இவ் வவத்தைகளின் பாவாபாவங் (உண்மை இன்மை)களை யறிகின்ற சாக்ஷியாகிய ஆத்மாவிற்கு ஓர்காலத்தும் அபாவங்காணப்படாமையின், ஆத்மாவே மெய்யென்றும் (சத்தியப்பொருளென்றும்) அபரோக்ஷமாக வறிந்த அறிஞர்கள் அநாத்மாவாகிய தனக்கு வேறாயுள்ள சரீராதிகள் கெடுவதற்குக் கலங்கார்களாதலின், கற்றுணர்ந்த பேரதனாற் கலங்கார்கா ணென்றார்.

(இ—ள்) நீயும் = நீயும், நானும் = யானும், புவிமேல் நிருபர்களும் = உலகின்கண்ணுள்ள வேந்தர்களுகிமாகிய, ஆர்க்கும் = யாவருக்கும், மெய்யுணர்வால் = தத்துவஞானத்தால், ஆயுங்கால் = ஆராயுமிடத்து, பிறந்திறப்பது = உற்பத்தியாகி நாசத்தையடைவது, இலேயென்றவரோ = இல்லேயென்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

ஈங்கெவர்க்கும் பிறந்திறப்ப தில்லேயென்றீ ரிவ்வுலகி
னீங்குபவம் யார்க்கிதனே நிச்சயமாய்ச் சொல்லுமென (எ)

(இ—ள்.) ஈங்கு = இவ்விடத்தில், எவர்க்கும் = யாவருக்கும், பிறந்து இறப்பது = உற்பத்தியாகி நாசத்தையடைவது இல்லேயென்றீர் = இல்லேயென்று கூறினீர், இவ்வுலகில் = இப்பூமியினிடத்து, நீங்குபவம் = இறத்தல் பிறத்தல்முதலானவை, யார்க்கு = யாவருக் குள்ளன, இதனே = இந்தவுண்மையை, நிச்சயமாய் = உறுதியாகச், சொல்லுமென = கூறுவீராகவென் றருச்சுனன் கேட்க. ()

நீங்குதல்என்னும் தொழிற்பெயர். நீங்குமென முதனிலே மாத்திரமாய் நின்றது.

இத்தரையிற் பிறந்திறப்ப தொடுத்தவுடற் கடுத்தபொறி
நித்தியமா கியவான்மா நின்சொரூப மென்றவரோ (அ)

(இ—ள்.) இத்தரையில் = இந்நிலவுலகினிடத்து, பிறந்து, இறப்பது = தோற்றிப் பின்னரழிவது, எடுத்தவுடற்கு = (கன்மபலனே யநுபவிப்பதற்கு ஸ்தானமாக) வெடுத்த தேகத்திற்கு, அடுத்தபொறி = பொருந்தியஇயற்கையாம், நித்தியமாகிய = உற்பத்தி நாசங்க ளில்லாததாகிய, ஆன்மா = ஆத்மாவே, நின்சொரூப மென்றவரோ = உனது நிஜசொரூபமென்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

ஆன்மாவென்பதில் பரிநிலேயேகாரம் விகாரத்தாற் ருெக்கது.

அங்கமுயி ரிந்தியநா னன்றிவே றெனேக்காணே
னிங்கியான் வேறுண்டே லெனக்கறியப் புகலுமென (க)

(இ—ள்.) அங்கம் = தேகத்தையும், உயிர் = பிராணனேயும், இந்தியம் = ஞானேந்திரிய கன்மேந்திரியங்களேயுமே, நானன்றி

உ யான்என்னுஞ் சொல்லிற்கு முணர்ச்சிக்கும் பொருளாகக் கண்டேனே யல்லாமல், வேறு = இவைகளுக்குவேறாக, எனைக்காணேன் = என்னைக் கண்டிலேன், யான்வேறுண்டேல் = யானென்னும் சொல்லின் பொருள் இத்தேகாதிகளைவிட வேறாக விருக்குமாயின், (அதனை) இங்கு = இவ்விடத்தில், அறிய = யான் தெரிந்து கொள்ளும்படி, புகலுமென = கிருபைகூர்ந்து கூறவேண்டுமென்று தனஞ்சயன் கேட்க. (எ-று.)

அங்கமுதலிய மூன்றனுள் எண்ணும்மை தொக்கு நின்றது.

மெய்யுயிரிந் திரியங்களல்லால் வேறறியே னென்றவனும்
மையவவை யாலறியப் படானுநீ யென்றவரோ. (௧௦)

(இ—ள்.) மைய = இரகசியமாக (போர்க்களத்தி னெருங்கியிருக்கின்ற பிறர்செவிக்குப் புலப்படா வண்ணமாக,) மெய் = தேகமும், உயிர் = பிராணனும், இந்திரியங்களல்லால் = இந்திரியங்களுமாய (இவைகளையே யானென்று கண்டேனே யன்றி,) வேறு = இவற்றிற்குவேறாக, அறியேனென்றவனும் = எனது சொரூபத்தைக் கண்டிலே னென்று அவற்றை விஷயமாகஅறிந்த அறிவாயிருந்து கூறியவனும், அவையால் = முன்கூறிய தேகாதிகளால், அறியப்படானும் = அறிதற்கு விஷயமாகாதிருக்கின்றவனும் (ஆகிய*உ. பிரத்தியகாத்ம சொரூபமே,) நீயென்றவரோ = நீயாயிருக்கின்றாயென்று திருவாய்மலர்ந்தருளிய பகவானீர்தானோ. ()

தேகம்வே றாகிலதைச் சேர்ந்ததிவ னேதெனவே
சோகமே விளைகருமத் தொடர்ச்சியினு லென்றவரோ. (௧௧)

(இ—ள்.) தேகம் வேறாகில் = உடம்பு ஆத்மாவிற்கன்னியமானால், அதை = அவ்வுடம்பை, இவன் = இந்த ஆத்மாவானவன், சேர்ந்தது = சம்பந்தித்தது, ஏதென் = எதனாலென்று தனஞ்

*உ. அந்தராத்மாவாகிய கூடஸ்தன், பிரத்தியகாத்மாவாம்.

சயன்கேட்க, *உக. சோகமேவினை = (ஜனன மரணாதிகளின் வாயிலாகத்) துன்பத்தையே யுண்டாக்கும், கருமத் தொடர்ச்சியினு லென்றவரோ = நல்வினை தீவினைகளாய கன்மசம்பந்தத்தாலென் றுரைத்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

தேகமெடா முன்கருமச் செயல்வருமா றேதெனவே
யேகமா மரமும்வித்து மெனுமுறைபோ லென்றவரோ. (கஉ)

(இ—ள்.) தேகம் = உடம்பை, எடாமுன் = எடுப்பதற்கு முன்பு, கருமச்செயல் = கருமமாகிய செய்கைகள், வருமாறு = வருகின்றவிதம், ஏதென = எப்படியென்று காண்டீபன் கேட்க, ஏகமாம் = ஒன்றாகிய, மரமும் = (வித்துக்கு) விருக்ஷமும், வித்தும் = (விருக்ஷத்துக்கு) விதையும், எனுமுறைபோல் = (காரணமாமென்னும் பீஜாங்குரநியாயம்போல, (அநாதியே கன்மத்துக்குச் சரீரமும் சரீரத்துக்குக் கன்மமுங் காரணமானமையின் கன்மச்செயல் வரக்கூடும்), என்றவரோ = என்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

காயமுந்தா னும்பிறிதேற் கன்மமெவர் செய்ததென
தீயவுடற் கலதுகன்மச் செயறனக்கே தென்றவரோ. (கங)

(இ—ள்.) காயமும் = உடலும், தானும் = ஆத்மாவும், பிறிதேல் = வேறுவேறுமாயின், கன்மம் = கன்மங்கள், எவர்செய்ததென = யாவராற் செய்யப்பட்டதென் றருச்சுனன் கேட்க, கன்மச்செயல் = கன்மச்செய்கையானது தீயவுடற்கலது = கொடிய தேகத்திற்கே யல்லாமல், தனக் கேதென்றவரோ = ஆத்மாவிற் கில்லையென் றுரைத்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

படர்கரும முடல்செய்யிற் பலமுறுவ தார்க்கெனவே
யடர்பலமு முடற்கேயா மறிவார்க்கே தென்றவரோ. (கச)

---

*உக. இங்குக் கருமமென்றது, வேதவிகிதமான சகாமகன்மமும், நிஷேதகன்முமாய விரண்டினை. இவை பிறப்பிறப்பாகிய சம்சாரதுன்பங்களை யுண்டாக்குதற்கு நிமித்தமாமன்றிச் சம்சாரநிவிருத்தியாகிய விசிராந்தியை யுண்டாக்குதற்குக் காரணமாகாமையின், சோகமேவினைகரும மெனத் தேற்றேகாரங்கொடுத்தார்.

(இ—ள்.) படர் கருமம் = பற்பலவிதமாக விரிந்த கன்மங்களை, உடல்செய்யின் = தேகஞ்செய்யுமானால், பலமுறுவது = (அக்கன்மங்களின்)பயனாய புண்ணியபாபங்கள் வந்துபொருந்துவது, யார்க்கென = எவருக்கென்று தனஞ்சயன் கேட்க, அடார் பலமும் = இடையீடின்றி மாறிமாறிவருகின்ற அப்பலன்களும், உடற்கேயாம் = தேகத்திற்கேயாகும், அறிவார்க்கு = அப்புண்ணியபாபங்களுக்கு வேறாயிருந்துகொண்டு அவற்றை அறிகின்ற ஆத்மாவிற்கு, ஏதென்றவரோ = இல்லையென்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

வெய்யவினை யுடற்கென்றான் மெய்யிங்கே விழவான்மா
வையமற நகரசொர்க்க மனுபவிப்ப தேதெனவே. (கரு)

(இ—ள்.) வெய்யவினை = கொடியதாய கன்மத்தின் பயனானது, உடற்கென்றால் = தேகத்திற்கென்று சொல்லுவீராயின், மெய் = சரீரமானது, இங்கே = இந்நிலவுலகின்கண்ணே, விழ = மரணமாகி வீழ்ந்த பின்னர், ஆன்மா = (எஞ்சியிராநின்ற) ஆத்மாவானது, ஐயமற = சந்தேகமின்றி, நரக சொர்க்க மநுபவிப்பது = நரக சொர்க்கங்களை யநுபவிக்கு மென்று சிலர் கூறுவது, ஏதென = ஏதனாலென்று தனஞ்சயன் கேட்க. (எ-று.)

ஏகாரம் ஈற்றசை வினையின்காரியமாய புண்ணியபாபங்களை வினையென்றது காரணவாகு பெயர்.

அநுபவமே யிலையதுவீ ணாரோபித நிகழ்த்திற்
றனுகரணச்செயறனதாய்ச் சார்வதுபோலென்றவரோ. (கசு)

(இ—ள்.) அநுபவமே யிலை = (ஆன்மாவிற்கு நரகசொர்க்கங்களின்) அநுபவமேயில்லை, அது = ஆன்மாவிற்கு நரகசொர்க்கா நுபவமுண் டென்பதை, நிகழ்த்தில் = கூறப்புகின், தனுகரணச்செயல் = சரீரேந்திரியாதிகளின் செய்கையானது, தனதாய் = தன்னுடைய செய்கையாக, சார்வதுபோல் = பொருந்துதலைப்

போல, வீணு *௨௨.ரோபிதம் = பிரயோசனமின்றிய கற்பனையே யாகும், = என்றவரோ என்று செப்பிய பகவானீர்தாஞே.(எ-று.)

---

*௨௨. ஆரோபிதம், அத்தியாசம், கற்பனை யென்பன வொருபொருள். தனதபாவாதிகரணத்தில் (தானில்லாதவிடத்தில்) தனதவபாசம் (தனதுதோற்றம்) அத்தியாசமாம். அல்லது பிராந்திஞானத்தின் விஷயமும், பிராந்திஞானமும் அத்தியாசமாம். அல்லது அதிஷ்டானத்தினும் விஷமசத்தையுடையதி னவபாசம் அத்தியாசமாம்.

அவ்வத்தியாசமும், அர்த்தாத்தியாசம், ஞானத்தியாசமென்னும் பேதத்தாலிரண்டுவிதமாம். அவற்றுள், அர்த்தாத்தியாசமும், கேவலசம்பந்தாத்தியாசம், சம்பந்தசகித சம்பந்தியத்தியாசம், கேவல தர்மாத்தியாசம், தர்மசகித தர்மியத்தியாசம், அந்நியோந்நியாத்தியாசம், அந்நியதராத்தியாச மென்னும் பேதத்தா லறுவகைப்படும்.

அவற்றுள், க. ஒரு பதார்த்தத்தில் மற்றொரு பதார்த்தத்தின் சம்பந்தமாத்திரம் அத்தியாசமாதல், கேவல சம்பந்தாத்தியாசமாம்.

அது, இது சர்ப்பமென்னும் வியவகாரத்தில் (தோற்றத்தில்) மூப்புரியாலாக்கப்பட்டிருத்தல், நீண்டு வளைந்திருத்தல் முதலிய இரச்சுவின் விசேஷவடிவத்திற்கும், இதுவென்னுந் தன்மையாகிய சாமானிய வடிவத்திற்கும்(பிண்டாகாரத்திற்கு) முள்ளதாதான்மிய சம்பந்தம் சர்ப்பத்திற்றேற்றல் போல. நானிருக்கிறே னென்னும் வியவகாரத்தில் ஆன்மாவின் விசேஷவடிவாய நித்தியமுத்தத்தன்மை பூரணத்தன்மை முதலியவற்றிற்கும், சாமானியவடிவாய இருப்பிற்குமுள்ள தாதான்மியசம்பந்தம், அஞ்ஞானகாலத்தில் அகம்பதார்த்தமாய்த் தோற்றுகிற சரீரத்தி லத்தியாசமாதலும் பிறவுமாம்.

௨. ஒரு பதார்த்தத்தில் மற்றொரு பதார்த்தமும் அதன் சம்பந்தமும் அத்தியாசமாதல், சம்பந்தசகிதசம்பந்தியத்தியாசமாம்.

அது, இது வெள்ளியென்னும் வியவகாரத்தில் கிளிஞ்சிலினிடத்து வெள்ளியு மதன் சம்பந்தமும் அத்தியாசமாதல் போல. யான் அறிந்தேனென்னும் வியவகாரத்தில் யான் என்னும் பதார்த்தமாகிய சுயம்பிரகாச ஆத்மாவினிடத்தில் விஷயங்களைச் சுட்டியறிகின்றசிதாபாசனுமவன் சம்பந்தமும் அத்தியாசமாதலும் பிறவுமாம்.

௩. ஒரு பதார்த்தத்தில் மற்றொரு பதார்த்தத்தின் தர்ம மாத்திரம் அத்தியாசமாதல், கேவலதர்மாத்தியாசமாம்.

மற்றுடலின் செய்கைதன்மேல் வருமயக்க மேதெனவே
முற்றுணர்வொன் றில்லாத மோகமென்று சொன்னவரோ.()

(இ—ள்.) மற்றுடலின் செய்கை = (ஆன்மாவிற்கு) வேறு யுள்ளவுடம்பினது பருத்த லிளைத்தலாதி செய்கைகள், தன்மேல்= ஆன்மாவாகிய தன்னிடத்தில், வருமயக்கமேதென = யான் பருத்தே னிளைத்தே னென்றுண்டாகின்ற பிராந்திக்குக் (காரணம்) யாதென்று காண்டீபன்கேட்க, முற்றுணர்வு = பூரணஞானமானது, ஒன்று = பொருந்துதல், இல்லாத = இன்றிய, மோகமென்று சொன்னவரோ = அஞ்ஞானமே (காரணமா) மென்று கூறியருளிய பகவானீர்தானோ. (எ-று.)

இங்கு ஒன்றுஎன்பது முதனிலைத்தொழிற்பெயர்.

---

அது, நீர் சுடுகிறதென்னும் வியவகாரத்தில், நீரினிடத்து அக்கினியின் சுடுதர் றர்மமாத்திரம் அத்தியாசமாதல் போல. யான் குருடன் செவிடனென்னும் வியவகாரத்தில் ஆன்மாவினிடத்து இந்திரியாதிகளின் குருட்டுத்தன்மை செவிட்டுத்தன்மைகள் மாத்திரம் அத்தியாசமாதலும் பிறவுமாம்.

ச. ஒரு பதார்த்தத்தில் மற்றொரு பதார்த்தம் தன் தர்மத்தோடு அத்தியாசமாதல் தர்மசகித தர்மியத்தியாசமாம்.

அது, இவ்வஸ்திரஞ் செந்நிறத்தென்னும் வியவகாரத்தில், வெண்ணிறமுடைய வஸ்திரத்தினிடத்துச் செந்நிறமாகிய தர்மத்தோடு அதையுடைய குசும்பாத்திரவிய மத்தியாசமாதல் போல யான் கர்த்தா போக்தாவென்னும் வியவகாரத்தில் அகர்த்தா அபோக்தாவாகிய ஆன்மாவினிடத்துக் கர்த்திருத்துவ போக்திருத்துவாதி தர்மங்களோடு அவைகளையுடைய அந்தக்கரண மத்தியாசமாதலும் பிறவுமாம்.

ரு. இரண்டு பதார்த்தங்களின் பரஸ்பரவத்தியாசம், அந்நியோந்நியாத்தியாசமாம்.

அது, இவ்வுருக்கள்வனென்னும் வியவகாரத்தில், கள்வனிடத்து வுருவென்னும் பதார்த்தமாகிய மரத்தின் தாதான்மிய சம்பந்தமும் மரத்தினிடத்துக் கள்வனு மத்தியாசமாதல் போல, யான் மனிதனாயிருக்கிறேனென்னும் வியவகாரத்தில் மனித பதத்தின் பொருளாய சரீரத்தினிடத்து ஆத்மாவின் தாதான்மிய சம்பந்தமும், ஆன்மாவினிடத்துச் சரீரமு மத்தியாசமாதலும் பிறவுமாம்.

அறிவுதே கந்தனக்கோ வான்மாவிற் கோவெனவே
பிறிவுசெயி லசித்துடலம் பிரமமறி வென்றவரோ. (கஅ)

(இ—ள்.) அறிவுதேகந்தனக்கோ = ஞானலக்ஷண முடம் பிற்கா, ஆன்மாவிற்கோ = ஆன்மாவிற்கா, என = என்று தனஞ் சயன்கேட்க, பிறிவுசெயில் = (உடம்பையும் ஆத்மாவையும்

---

௬. இரண்டில், ஒரு பதார்த்தத்தின் சொரூபம் அத்தியாசமாதல், அந்நி யதராத்தியாசமாம்.

அது, கானலினிடத்து அது நீரென்னு முணர்ச்சியுண்டாகுங் காலத்து கானலில் நீரின்சொரூபம் அத்தியாசமாதல்போல யான்மூடனென் னும் வியவகாரத்தில் ஞானவடிவாய ஆத்மாவி னிடத்து மூடவடி வாய அஞ்ஞானத்தின் சொருப மத்தியாசமாதலும் பிறவுமாம். இவ் வாறத்தியாசங்களையுஞ் சொரூபாத்தியாசம், சம்சர்க்காத்தியாசமெ ன்று மிரண்டினு ளடக்கியுங் கூறுவர். அங்ஙனம் அடங்குங் கிரமத் தையும்ஆன்மாவின்சொரூபம் அத்தியாச மாகாமைக்குக் காரணத் தையும், விசாரசந்திரோதயம் ஆறுவது கலையிற் காணலாம்.

ஞானத்தியாசமும், அபரோக்ஷ பரோக்ஷ பேதத்தா லிரண்டு வகைப்ப டும். அவற்றுள், க. கிளிஞ்சில் வெள்ளி இரச்சுசர்ப்பம் சொப்பன பதார்த்த முதலியவற்றின் பிரத்தியக்ஷஞானம் அபரோக்ஷப் பிராந் திவடிவமாம். இதுவியாவகாரிக திருஷ்டியிலாம். பரமார்த்த திரு ஷ்டியாலோ கூறிய ஞானங்களோடு, தானல்லாததைத் தானென்ற றிதலும், தனதல்லாததைத் தனதென்றறிதலும், அபரோக்ஷப்பிரா ந்தி வடிவமேயாம்.

உ. பாமரன் விப்பிரலம்பன் முதலானவர்களாற் கூறப்படும் இமயத்தின் வடபாற் பொதிகையுளது, பொதிகையின் றென்பா லிமயமுளது. ஆக்கோடில்லது, மாக்கோடுள்ளது என்றுற்போன்ற வாக்கியங்களா லுண்டாகும் ஞானமும் கிளிஞ்சில்வெள்ளி முதலானவற்றின் ஞான மும் வாக்கிய ஜன்னியமா யினதுவும் பரோக்ஷப் பிராந்திவடிவமாம், இது வியாவகாரிக திருஷ்டியிலாம். பரமார்த்த திருஷ்டியாலோ இங்குக் கூறிய ஞானங்களோடு பிரஹ்மாத்ம ஐக்கியவிரோதமான வாக்கிய ஜன்னியஞானங்களும், பரோக்ஷப் பிராந்திவடிவமேயாம்.

எல்லாவற்றிற்கும் ஆத்மா அதிஷ்டானமாயிருத்தலால், எல்லா அத்தியா சங்களிலும் ஆத்மாவின் சம்பந்த அத்தியாசஞ் சம்பவிக்கிறது.

வேறு) பிரித்துப் பார்க்குமிடத்து, அசித்து உடலம் = உடம்பு ஜடலக்ஷணமுள்ளது, பிரமம் = பிரஹ்மவடிவ ஆத்மா, அறிவென்றவரோ = ஞானலக்ஷணமுள்ளதென்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

ஏகாரம் அசைநிலை.

தேகமசித் தாகிலிந்தச் செயல்வருவ தேதெனவே
யேகபரஞ் சோதியின்மு னிருக்கையினா லென்றவரோ ()

(இ—ள்.) தேகம்அசித்தாகில் = உடம்புஜடமானால், இந்தச் செயல்வருவது = (அச்சடமாயவுடம்பிற்கு விதிநிஷேதகன்மங்களைச் செய்வதாகிய) இச்செயல் வருகின்றவிதம், ஏதென = ஏதனாலென்று விசயன்கேட்க, ஏகபரஞ்சோதியின்முன் = ஒன்றாயும் மேலானதாயு முள்ள சேதனத்தின் சமூகத்தில், இருக்கையினால் = இருக்கின்றபடியால், (உடம்பிற்குக் கன்மங்களை யியற்றுந்தகுதி வரக்கூடும்) என்றவரோ = என்றுபகர்ந்தருளிய பகவானீர்தானே.

ஏகாரம் அசைநிலை.

இருக்கினுமசேதனத்துக் கிச்செயலுண் டோவெனவே
யுருக்குபடாக் காந்தமுன்னி லூசிநிக ரென்றவரோ (௨௦)

(இ—ள்.) இருக்கினும் = (சேதனத்தின் சமூகம்பற்றி) இருந்திடினும், அசேதனத்துக்கு = (ஜடமாய) உடம்பிற்கு, இச்செயலுண்டோ = (கன்மங்களையியற்றும்) இத்தகுதியுண்டாமா, என = என்றுகாண்டீபன்கேட்க, உருக்குபடா = நெருப்பினாலுருக்கப்படாத, காந்தமுன்னில் = காந்தத்தினது சமூகத்தில், ஊசிநிகரென்றவரோ = ஊசிக்குத் தொழிற்படுஞ் செயலுண்டாவதுபோல, ஆன்மாவின்சமூகத்திலிருக்கின்றவுடம்பிற்கும் கன்மச்செயல்வரக்கூடுமென்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

எஞ்சிநின்ற தாஷ்டாந்தம் வருவிக்கப்பட்டது, ஏகாரம் அசைநிலை.

சொன்னசெய லுடற்கானாற் சுகதுக்கம் யார்க்கெனவே
அன்னசுக துக்கமுந்தா னவ்வுடற்கே யென்றவரோ. (உக)

(இ—ள்.) சொன்னசெயல் = மேற்சொல்லிய கன்மச்செயலானது, உடற்கானால் = தேகத்திற்கே யாமாயின், சுகதுக்கம் = இன்பதுன்பங்கள், யார்க்கென = எவர்களுக்கென்று விசையன் கேட்க, அன்னசுகதுக்கமும் = அத்தன்மைத்தாயவின்ப துன்பங்களும், அவ்வுடற்கே யென்றவரோ = முன்சொல்லிய வுடம்பிற்கேயாமென் றுரைத்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

ஏ—அசை.

சேதனமா மான்மாவைச் சேராத துக்கசுக
மோதுசட மாமுடலை யுற்றிடுமோ சொல்லுமென. (உஉ)

(இ—ள்) சேதனமாம் ஆன்மாவை = ஞானவடிவமாகிய ஆத்மாவை, சேராததுக்கசுகம் = சம்பந்தியாததுன்பவின்பங்கள், ஓது = சொல்லப்பட்ட, சடமாம் உடலை = அசித்தாகியவுடம்பினை, *உஙு. உற்றிடுமோ = சம்பந்தித்திடுமோ, சொல்லுமென = (தேவரீரிதைத்) திருவாய்மலர்ந்தருள்வீராக வென்று தனஞ்சயன்கேட்க.

பூதமைந்தோ டைந்துயிர்கள் புலன்கள்பத்து மனமுதனுன்
கிதிருமெய் யிதின்மனத்துக் கின்பதுன்ப மென்றவரோ. (உங)

(இ—ள்.) பூதம்ஐந்தோடு = (ஐந்துபூதங்களின் காரியமாய) ஸ்தூலசரீரத்தோடு, ஐந்துயிர்கள் = பிராணாதியைந்து வாயுக்கள், புலன்கள்பத்து = ஞானேந்திரியகன்மேந்திரியங்களாய புலன்கள்

---

* உஙு. ஒருவனை மற்றொருவன் ஆயுதத்தாற் கொலைசெய்தால், அக்கொலையினாலாய தண்டனையானது அறிவுடைப்பொருளான புருடனைச் சாருமேயல்லது, அறிவில்பொருளான ஆயுதத்தைச் சாராததுபோல ஆன்மாத் தேகத்தாற் கன்மத்தைச் செய்யின் அக்கன்மத்தின் பயனாகிய வின்பதுன்பங்கள், சேதனவடிவாகிய ஆன்மாவைச் சாருமேயன்றிய சேதனவடிவான தேகத்தைச் சாராதென்னும் கருத்துத் தோன்றத் தனஞ்சயன், ஜடமாமுடலையுற்றிடுமோ வென்றான்.

பத்து, மன்முதல் நான்கு=மனம் புத்தி சித்தம் அகங்கார மாகிய வுட்கருவிகள் நான்கு, ஈது=ஆகியவிவைகள், இருமெய்=இரண்டு சரீரங்களாம், இதில்=இரண்டு சரீரங்களாக வமைந்துள்ள வித்தத் துவங்களுள், மனத்துக்கு=(சங்கற்பவிகற்பமே சொரூபமாயுள்ள) மனமென்னும் ஓர் தத்துவத்திற்கே, இன்ப துன்ப மென்றவரோ =சுகதுக்கங்க ளென்றுரைத்தருளிய பகவானீர்தானோ, (எ-று.)

ஈது இதுவென்பன பன்மையி லொருமை மயங்கிவந்த வழுவமைதிகள், பூதங்களின் காரியமாய் தூலசரீரத்தைப் பூதமென்றது காரணவாகுபெயர்.

இந்தவிரு வகைத்தனுவிற் கேதுவே தெனவினவ
முந்தியகா ரணமதனுன் மூன்றுதனு வென்றவரோ. (௨௪)

(இ—ள்.) இந்த இருவகைத் தனுவிற்கு=இப்பொழுது கூறிய இரண்டுவகையாகிய தேகங்களுக்கு, ஏது ஏதென வினவ =மூலம் யாதென்று காண்டீபன் கேட்க, முந்திய = இவ்விரண்டு சரீரங்கட்கு முதன்மையாயுள்ள, காரணம் = காரணசரீரமாய அஞ்ஞானம் (மூலமாம்.) அதனுல்= அக்காரணசரீர மொன்றிருத்தலால், மூன்றுதனு வென்றவரோ = சரீரங்கள் மூன்றென்று பகர்ந்தருளிய பகவானீர்தானோ. (எ-று.)

மனமறியுந் துக்கசுக வரவென்றீ ரம்மனமு
வினவிலசே தனமலவோ விரித்தெனக்கு விளம்புமென. (௨௫)

(இ—ள்.) துக்கசுக வரவு = துன்பவின்பங்கள் வருதலை, மனம் அறியுமென்றீர் = மனம் அநுபவிக்கு மென் றுரைத்தீர், அம்மனமும் = அந்த மனமும், வினவில் = கேட்குமிடத்து, அசேதனமலவோ=மற்றைய தத்துவங்கள் போலச் சடமல்லவா, விரித்து = (அம்மனம் இன்பதுன்பங்களை யநுபவிக்கும் விதத்தை) விஸ்தரித்து, எனக்கு விளம்புமென = (அவ்விஷயத்திற் சந்தேகங் கொண்டுள்ள) எனக்கு விளங்கும்படியாகத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று விசையன் கேட்க. (எ-று.)

அம்மனத்தி லான்மா வபேதம்போற் றோன்றுதலால்
விம்முதுக்க சுகத்தைமன மேவுமென்று சொன்னவரோ. (உசு)

(இ—ள்.) அம்மனத்தில் = (அசேதனமல்லவா வென்று நீ முன்கேட்ட) அந்த மனத்தினிடத்து, ஆன்மா = ஆத்மாவானது, அபேதம் போல் = பேதமில்லாதது போலத், தோன்றுதலால் = பிரதிபிம்பித்துத் தோற்றுதாலால், விம்மு = கலக்கந் தருகின்ற, துக்கத்தை = துன்பத்தையும், சுகத்தை = இன்பத்தையும், மன மேவுமென்று = மனம் மருவுமென்று, சொன்னவரோ = உரைத்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

அந்தமனோ துக்கசுக மதனிடத்து நில்லாமல்
வந்திலங்கு மான்மாவை மருவியதென் சொல்லுமென. (உள)

(இ—ள்.) அந்தமனோதுக்கசுகம் = அந்தமனத்திற் குரிய துன்ப வின்பங்கள், அதனிடத்து = அம்மனத்தி னிடத்திலேயே, நில்லாமல் = நின்றுவிடாமல், இலங்கும் ஆன்மாவை = (அறிவு வடிவாய்) விளங்காநின்ற ஆத்மாவை, வந்து மருவியது = வந்து சம்பந்தித்தது, என் = யாதுகாரணம், சொல்லுமென = (தேவரீர் தைத் தயவுகூர்ந்து) திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று தனஞ்சயன் கேட்க, (எ-று.)

வெய்யகன லின்சூடு மேல்வைத்த சட்டியினூ
டுய்யபுன லூடுவந்தங் கொன்றுதல்போ லென்றவரோ. (உஅ)

(இ—ள்.) வெய்யகனலின்சூடு = கொடிய நெருப்பினிடத்துள்ள வுஷ்ணமானது, மேல்வைத்த = மேலே வைத்துள்ள, சட்டியினூடு = சட்டியினிடத்து, உய்யபுனலூடு = பெய்துவைத்த நீரின்கண்ணே, வந்துவொன்றுதல்போல் = வந்து பொருந்துதலைப் போல, (மனத்தினிடத்துள்ள இன்பதுன்பங்கள் அம்மனதினோடு சம்பந்தித்துள்ள ஆத்மாவைப் பொருந்தியது), என்றவரோ = என்று வுரைத்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

எஞ்சி நின்ற தாஷ்டாந்தங்கள் விரிக்கப்பட்டன அங்கு ஆசையில்.

சித்தாகு மான்மாவுஞ் சடமாகுஞ் சித்தமுந்தா
னொத்தாங் கிரண்டுமொன்று யுற்றவகை சாற்றுமெனா. (உகூ)

(இ—ள்.) சித்தாகும் ஆன்மாவும் = ஞானவடிவமாகும் ஆத்மாவும், சடமாகும் = அசேதனவடிவமாகும், சித்தமும் = மனமும், ஒத்தாங்கு = பேதமில்லாததுபோல, இரண்டும் ஒன்று யுற்றவகை = இரண்டும் ஏகமாய்ச் சேர்ந்த விதத்தை, சாற்று மெனா = உரைத்தருள்வீராகவென்று தனஞ்சயன் கேட்க. (எ-று.) தான் அசை.

வல்லிரும்பு கனலுடனே மருவியது போன்மனமு
மொல்லையிலான் மாவுடனே யுற்றதுகா ணென்றவரோ. (௩௦)

(இ—ள்.) வல் = வலித்ரகிய, இரும்பு = (பிரகாசமின்றிய) இரும்பானது, கனலுடனே = (பிரகாசமுள்ள) நெருப்பினோடு, மருவியது போல = அபேதமாகச் சம்பந்தித்திருப்பதுபோல, மனமும் = (பிரகாசமில்லாத) மனமும், ஆன்மாவுடனே = (சுயம் பிரகாச வடிவாய) ஆத்மாவுடனே, ஒல்லையில் = அநாதியாகவே, உற்றது = அபேதம்போற் பொருந்தியது, காண் = இதனை யறிவாயாக, என்றவரோ = என்று பகர்ந்தருளிய பகவானீர்தாமோ. ()

உற்றதெத னாலெனவே யுள்ளமவி வேகமுறப்
பற்றியதன் மேலுமதன் பண்புவந்த தென்றவரோ. (௩௧)

(இ—ள்.) உற்றது = (மனத்தின் தர்மங்களாய இன்பதுன்பங்கள் ஆத்மாவை வந்து) சம்பந்தித்தது, எதனாலென = யாதினாலென்று காண்டீபன் கேட்க, உள்ளம் = மனமானது, அவிவேக முற = விவேகமில்லாமையைப் பொருந்த, தன்மேலும் = (ஆன்மாவாகிய) தன்னிடத்திலும், அதன் பண்புவந்த தென்றவரோ = அம்மனத்திற்குரிய இன்பதுன்பங்கள்வந்து பொருந்தின வென்று பகர்ந்தருளிய பகவானீர்தாமோ. (எ-று.)

அடுத்தகுணம் போமோபின் னான்மாவை விட்டெனவே
யெடுத்தசெம்பூ நிறம்படிகத் தேறுதல்போ லென்றவரோ. (௩௨)

(இ—ள்) அடுத்தகுணம் = அநாதியாகச் சம்பந்தித்துள்ள இன்பதுன்பங்களாய குணங்கள், பின்=பின்பொரு சமையத்தில், ஆன்மாவை விட்டு = ஆத்மாவைப் பிரிந்து, போமோ=போகுமா, என = என்று விசையன் கேட்க, எடுத்த = தாங்கப்பட்டுள்ள செம்பூ நிறம் = சிவந்தமலரின் கண்ணுள்ள செந்நிறமானது, படிகத்து = வெண்பளிங்குக் கல்லின்கண்ணே, ஏறுதல் போல் = (அந்நியாசமாக) ஏறித்தோன்றுதல்போல, (சின்மாத்திரமாயுள்ள ஆன்மாவினிடத்திலும் மனத்தின்குணங்களாய வின்பதுன்பங்கள் * உச. அத்தியாசமாகத் தோன்றுகின்றன), என்றவரோ = என்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

எஞ்சிநின்ற தாஷ்டாந்தம் விரிக்கப்பட்டது.

சுத்தபடி கம்போற் சொரூபமாய்த் தானிருக்க
மெத்தவுமா சாமலின மேவியதென் சொல்லுமென. (௩௩)

(இ—ள்) சுத்தபடிகம்போல்= களங்கமில்லாத பளிங்கினைப் போல, சொரூபமாய்த் தானிருக்க= சச்சிதாநந்த வடிவமாத்திரமாக ஆன்மாவிருக்க, மெத்தவும் = மிகவும், ஆசாமலினம் = இராகமாகிய அழுக்கானது, மேவியது = (ஆன்மாவினிடத்தில்) சம்பந்தித்தது, என் = யாதுகாரணம், சொல்லுமென = (இதனைத் தேவரீர்) திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று தனஞ்சயன் கேட்க. ()

அநாதியாம் வாசனையா லடைந்ததா சாமலின
மனோபந்த மிருக்கின்முத்தி வாராதென் றுரைத்தவரோ. (௩௪)

(இ—ள்.) அநாதியாம் வாசனையால் = அநாதியாக வுள்ள காண வாசனையினால், ஆசாமலினம் = இராகமாகிய களங்கமானது, அடைந்தது = வந்துசேர்ந்ததாம், மனோபந்தம் = (அதுவே) மனத்

*உச. மலரின் கண்ணுள்ள செந்நிறமானது பளிங்கினிடத்துத் தோற்றினும், உண்மையில் பளிங்கினிடத்தினில்லாத வாறுபோல, மனத்தின் குணங்களான்மாவினிடத்துத் தோற்றினும், அத்தோற்றம் அத்தியாசமேயல்லது உண்மையி லான்மாவினிடத்து இல்லையெனும் பொருள் தோன்றச், செம்பூநிறம் படிகத் தேறுதல்போலென்றார்.

தினுக்குப் பந்தமாம், இருக்கில் = அப்பந்தமிருக்கும் வரையில், முத்திவாராதென்று = மோக்ஷமடையப் படமாட்டாதென்று, உரைத்தவரோ = பகர்ந்தருளிய பகவானீர்தானோ (எ-று.)

பந்தமெது முத்தியெது பகுத்துரைக்க வேண்டுமென்றன்
சிந்தை தெளியவென்று திருத்தாளிணை வணங்க. (ருரு)

(இ-ள்) பந்தமெது = பந்தத்தி னிலக்கணமியாது, முத்தியெது = மோக்ஷத்தி னிலக்கணமியாது, என்றன் சிந்தை = எனது புத்தியானது, தெளிய = தேர்ச்சியடையும் பொருட்டு, பகுத்து = (அவற்றினிலக்கணங்களை) வேறு பிறித்து, உரைக்க வேண்டு மென்று = சொல்லவேண்டுமென்று, திருத்தாளிணை = அழகிய பாதங்களை, வணங்க = தனஞ்சயன் நமஸ்கரிக்க (எ-று.)

தேகாதி தானெனவே சேரபிமா னங்கள்பந்த
மாகாத மானம்விடி லரியமுத்தி யென்றவரோ. (ருசு)

(இ-ள்.) தேகாதி = (தானல்லாத) சரீர இந்திரியாதிகளை, தானென = தானென்பதாக, சேரபிமானங்கள் = பொருந்துகின்ற அபிமானங்களை, பந்தம் = பந்தமாகும், ஆகாத = வேதங்களாலும் பெரியோர்களாலும் அங்கீகரிக்கலாகாத, மானம்விடில் = அபிமானத்தை விட்டால், (அதுவே) அரிய = பக்குவமில்லாதவர்களாலடைதற்கரிய, முத்தியென்றவரோ = மோக்ஷமென்று பகர்ந்தருளிய பகவானீர்தானோ. (எ-று.)

அபிமானம் வரும்வகையு மாங்கதுதான் றீர்வகையுந்
தபியாம லானறியத் தயவாகக் கூறுமென. (ருஎ)

(இ-ள்.) அபிமானம் வரும் வகையும் = (தானல்லாத தேகாதிகளைத் தானென்று மதித்தலாகிய) அபிமானம் வந்து பொருந்துகின்ற விதத்தையும், ஆங்கு = அதுபோல, அது = அவ்வபிமானமானது, தீர்வகையும் = நீங்குதற்குரிய வுபாயத்தையும், தபியாமல் = தவியாமல் (இவ்வபிமானத்தால் ஹானியைப்படையா வண்ணம்), யான் அறிய = அடியேன் தெரிந்து கொள்ளும்

படி, தயவாக = தயையாக, கூறுமென = திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று காண்டீபன் கேட்க. (எ-று) தான் அசைநிலை.

மறந்திடுமஞ் ஞானத்தான் மானம்வந்த தஞ்ஞான
மிறந்துவிடின் மானமும்போ மென்னவுரை செய்தவரோ. (கூஅ)

(இ—ள்.) மறந்திடும் அஞ்ஞானத்தால் = தனது நிஜவடிவத்தின் மறதிவடிவாய அஞ்ஞானத்தினுல், மானம்வந்தது = அபிமானம் வந்து சேர்ந்தது, அஞ்ஞானம் இறந்துவிடில் = அவ்வஞ்ஞானம் நாசத்தையடையுமாயின், மானமும் போமென்ன = அவ்வபிமானமும் ஒழியுமென்று, உரைசெய்தவரோ = பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

அந்தமுறை யஞ்ஞான மணுகுவதும் போவதுவுஞ்
சந்தயமில் லாதறியத் தயவாகக் கூறுமென. (கூகூ)

(இ—ள்.) அந்தமுறை = முன் சொல்லிய கிரமமாக, அஞ்ஞானம் அணுகுவதும் = அஞ்ஞானம் பொருந்துதற்கான வேதுவையும், போவதும் = (அது) ஒழிதற்கான வேதுவையும், சந்தயமில்லாது = ஐயமின்றி, அறிய = யான்தெரிந்து கொள்ளுதற்பொருட்டு, தயவாக = தயையாக (என்பேரில் உருக்கமான இரக்கம் வைத்து), கூறுமென = உரைத்தருள வேண்டுமென்று தனஞ்சயன் கேட்க. (எ-று.)

சந்தேகம், சந்தயமெனமரீஇயது.

அஞ்ஞானம் வந்த தனுதியது சொல்வதல்ல
மெய்ஞ்ஞானத் தாலே விடுமென் றுரைத்தவரோ. (ச0)

(இ—ள்.) அஞ்ஞானம் வந்தது = அஞ்ஞானம் ஒரு காரணத்தால் வந்ததென்று, சொல்வதல்ல = சொல்லத்தகுந்த தல்ல, அது = அவ்வஞ்ஞானம், அநாதி = அநாதி கற்பிதமாயுள்ளதேயாகும், மெய்ஞ்ஞானத்தாலே = உண்மை ஞானத்தால் (பிரஹ்மாத்மஐக்கிய ஞானத்தால்) விடுமென் றுரைத்தவரோ = ஒழியுமென் றுரைத்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

இரவியெதி ரடுத்துவந்த விருட்போல வஞ்ஞானம்
வரவிதியோ சோதிதன்பால் வந்தவகை யேதெனவே. (சக)

(இ—ள்.) இரவிஎதிர் அடுத்துவந்த ஆதித்தன் சந்நிதியில் நெருங்கிவந்த, இருள்போல = பூதவிருளைப்போல, சோதி தன்பால் = ஞானப்பிரகாசமாகிய என்னிடத்தில், அஞ்ஞானம் வர விதியோ = அஞ்ஞானவிருள் வருகிறதற்கு நியாயமுண்டோ, வந்த வகை = (இங்ஙனம் அது வருகிறதற்கு நியாயமில்லாதிருக்க) வந்திருக்கின்ற விதம், ஏதென = எதனாலென்று தனஞ்சயன் கேட்க. (எ-று.)

அந்த வறிவுவந்தா லஞ்ஞான மில்லையப்பாற்
சந்ததமு மானந்த சாகரநீ யென்றவரோ. (சஉ)

(இ—ள்.) அந்த அறிவுவந்தால் = (யாணித் தேகாதிகளினும் வேறாகிய) ஞானப்பிரகாசவடிவமென்னும் ஞான முனக்குண்டாகுமாயின், அஞ்ஞானமில்லை = அஞ்ஞானம் உன்பா லில்லாததே யாகும், அப்பால் = அந்த ஞானமுதயமான பின்பு, சந்ததமும் = எப்பொழுதும், நீயானந்தசாகரம் = நீயானந்தக் கடலாயிருப்பாய், என்றவரோ = என்றுரைத்தருளியபகவானீர்தானோ. (எ-று.)

வேதாந்தத் தாற்குருவான் மெஞ்ஞானம் வந்தவுடன்
றீதான துக்கசுகந் தீராத தேதெனவே. (சரு)

(இ—ள்.) வேதாந்தத்தால் = வேதாந்த சாஸ்திரார்த்தங்களைக்கேட்டலாலும், குருவால் = ஆசிரியன துபதேசத்தினாலும், மெஞ்ஞானம் = உண்மைஞானம், வந்தவுடன் = உதயமானபிற்கணத்திலேயே, தீதான = கொடிதான, துக்கசுகம் = துன்ப இன்பங்கள், தீராததேதென = ஒழியாததெதனாலென்று, தனஞ்சயன் கேட்க. (எ-று.)

பற்றறுமோ துக்கசுகம் பரோக்ஷஞா னத்தாலே
யற்றமா மவ்விரண்டு மபரோக்ஷத் தென்றவரோ. (சச)

(இ—ள்.) பரோக்ஷஞானத்தாலே = பரோக்ஷ ஞானத்தால், சுகதுக்கம் = இன்பதுன்பங்கள், பற்று அறுமோ = (வந்து) பொரு

க்துதலொழியுமோ, (மற்றெதனுலொழியுமெனின்). அவ்விரண்டும்=அவ்வின்ப துன்பங்க ளிரண்டும், அபரோக்ஷத்து = அபரோக்ஷ ஞானத்தாலே, அற்றமாம்=நிவிருத்தியாகும், என்றவரோ = என்றுரைத்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

பரோக்ஷ மபரோக்ஷமெது பகுத்துரைக்கவேண்டு மென்றன்
றிரோதமாம் புத்திநன்றாய்த் தெளியும் படிக்கெனவே. (சரு)

(இ—ள்.) பரோக்ஷமெது=பரோக்ஷஞானத்தின் லக்ஷணமியாது, அபரோக்ஷமெது=அபரோக்ஷஞானத்தின் லக்ஷணமியாது, எந்தன்=என்னுடைய, திரோதமாம்புத்தி=ஆவரணத்தான்மறைக்கப்பட்டுள்ளதாய புத்தியானது, நன்றாய்=செவ்விதாக, தெளியும் படிக்கு=தேர்ச்சியடையும் பொருட்டு, பகுத்துரைக்க வேண்டுமென=பிரித்துக் கூறவேண்டுமென்று தனஞ்சயன் கேட்க.(எ-று)

பகர்ந்த சத்தஞானம் பரோக்ஷ மனுபவத்தா
லகம்பிரம மெனுஞான மபரோக்ஷ மென்றவரோ. (சசு)

(இ—ள்.) பகர்ந்த=(அசத்வாபாதக ஆவரணத்திற்கு விரோதியென்றுசாஸ்திரங்களிற்) கூறிய, சத்தஞானம்=சாஸ்திர விசாரணையா லுண்டாகிய ஞானம், *உ௫ பரோக்ஷம்=பரோக்ஷ ஞானமாகும், அனுபவத்தால்=தனதனுபவத்தால், அகம்பிரம மெனும் ஞானம் = யான்பிரஹ்மமாக விருக்கின்றேனென் றுண்டாகும் அகண்டாகாரவிருத்திஞானம், * உ௬. அபரோக்ஷ மென்றவரோ

*உ௫. சச்சிதாநந்த வடிவமாகிய பிரஹ்மம் இருக்கிறது என்றறிதல் பரோக்ஷப்பிரஹ்மஞானமாம். அதனுல் அபானுபாதக ஆவரணத்தின் (பிரஹ்ம மில்லையென்னுந் தன்மையைச் சம்பாதிக்கு மறைப்பின்) நீக்கமுண்டாகிறது.

*உ௬. சச்சிதாநந்தவடிவப் பிரஹ்மம் நானென்றறிதல் அபரோக்ஷப்பிரஹ்மஞானமாம். அது அதிடம் திடமென்னும் பேதத்தாலிரண்டு விதமாம். அவற்றுள், க. அசம்பாவனை விபரீத பாவனைகளோடுண்டாகும் பிரஹ்மாத்ம ஐக்கிய நிச்சயம் அதிட அபரோக்ஷஞானமாம். அதனுல் உத்தமலோகத்தின் அடைவும் புனிதமாகிய ஸ்ரீமான்கள் குலத்திலாவது அல்லது நிஷ்காமத்தன்மையால் ஞானவான்களது குலத்திலாவது ஜன்மமுண்டாம்.

=அபரோக்ஷ ஞானமென்றும் பகர்ந்தருளிய பகவானீர்தானே. ()

தான்பிரம மென்றறிந்துந் தனுவைத்தா னென்றபுத்தி
யேன்போக வில்லையதை யெனக்கறியப் புகலுமென. (சஎ)

(இ—ள்) தான்பிரமமென் றறிந்தும்=யான் பிரஹ்மமென்று தெரிந்திருந்தும், தனுவை=சரீராதிகளை, தானென்ற புத்தி=யானென்ற ஞானம், ஏன் போகவில்லை=எதனு லொழியவில்லை, அதை = (அதுவொழியாதிருத்தற்குரிய) காரணத்தை, அறிய=தெரிந்து கொள்ளும்படி, எனக்கு=அடியேனுக்கு, புகலுமென = திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று விசயன் கேட்க. (எ-று)

கேள்வியினுன் மனனத்தாற் கிளர்ந்தயோ கங்களினு
லாள்பிரமத் தனுபவம்வந் ததுதீரு மென்றவரோ. (சஅ)

(இ—ள்.) *உஎ. கேள்வியினுல் = சாஸ்திரார்த்தங்களைக் கேட்டலினுலும், *உஅ மனனத்தால் =கேட்ட அர்த்தத்தின் சிந்தனத்தினுலும், கிளர்ந்த = நாளுக்குநாள் அதிகரித்துச்செய்த, *உகூ. யோகங்களினுல்=தியானுதிகளினுலும், ஆள்=தனக்குரி

உ. குருசந்நிதியிற் செய்யப்படு மகாவாக்கிய அர்த்தத்தின் சிரவண மனன நிதித்தியாசனமாகிய விசாரத்தால், திட அபரோக்ஷப்பிரஹ்ம ஞானமுண்டாகும். அதனுல் **அபானுபாதக ஆவரணமும்** (பிரஹ்மம் விளங்கவில்லையென்னுந் தன்மையைச் சம்பாதிக்கும் மறைப்பும்) **விக்ஷேபமும்** மாகிய காரியத்தோடு அவித்தையி (அஞ்ஞானத்தி)ன் நிவிர்த்தி யுண்டாய்ப், பிரஹ்மப்பிராப்தியாகிய மோக்ஷமுண்டாம். இவற்றின் விரிவை விசாரசந்திரோதய முதலாவது கலையிற் பார்க்கலாம்.

*உஎ. உபக்கிரம உபஸம்ஹாராதி யுக்திகளால், வேதாந்தவாக்கியத்தின் தாற்பரியத்தைக் குருசந்நிதியிற்கேட்டு நிச்சயஞ் செய்தலைக் **கேள்வி** யென்றுர்.

*உஅ. ஜீவப்பிரஹ்மங்களின் அபேதத்துக்குச் சாதகமும் பேதத்துக்குப் பாதகமுமான யுக்திகளால், அத்விதீயப் பிரஹ்மத்தைச் சிந்தனை செய்தலை **மனன**மென்றுர்.

*உகூ. அநாத்மாகார விருத்தியின் மறைப்பின்றிய பிரஹ்மாகாரவிருத்தியின் திதியாகிய**நிதித்தியாசனத்தை** யோகமென்றுர்.

மையான, பிரமத் தனுபவம் வந்து=பிரஹ்மாநுபவ மூதையமான பின்பு, அது=அந்தேதக புத்தியானது, தீருமென்றவரோ=நிவிருத்தியாகுமென் றுரைத்தருளிய பகவானீர்தானே. (எ-று)

ஆதியாஞ் சிற்சொரூப மாகாத தானினிமேற்
சோதிமன னாதியினற் சொரூபமா மோவெனவே. (சகூ)

(இ—ள்.) ஆதியாம்=மிகப்பழமையாய, சிற்சொரூபம்=சின்மாத்திர சொரூபம், ஆகாததான்=(முன்னமே) ஆகாதிருக்கப்பட்ட ஆன்மா, இனிமேல்=பின்பு, சோதி மனனாதியினால்=விளங்காநின்ற மனனாதிகளால், சொரூபம்=சின்மாத்திர சொரூபம், ஆமோ—ஆகுமோ, என=என்று தனஞ்சயன் கேட்க (எ-று.) ஏகாரம் ஈற்றசை.

எப்போதுஞ் சின்மயந்தா னெனன்மறந்து தேடுவது
செப்புமிடற் றணியிருக்கத் தேடுதல்போ லென்றவரோ. ()

(இ—ள்.) எப்போதும்=எக்காலத்திலும், சின்மயம்=சின்மாத்திர சொரூபம், தானெனல்=தானென்பதை, மறந்து=அயர்த்து, தேடுவது=(அடையவேண்டுமென்று) தேடுதலானது, செப்பு=சொல்லப்படுகின்ற, மிடற்று=கழுத்தினிடத்து, அணி இருக்க=ஆபரணம் இருக்கும்பொழுது, தேடுதல்போ லென்றவரோ=(கழுத்தணி யெங்குற்றதோவெனத்) தேடுதற்குச் சமானமாகுமென் றுரைத் தருளிய பகவனீர்தானே. (எ-று)

இதனையே கண்டாபரண நியாயமென்பர்

தேடியபின் றேகபுத்தி தீர்ந்துபோய்ச் சிற்சொரூபங்
கூடுவனோ யானென்குறைதீரச் சொல்லுமென. (ருக)

(இ—ள்.) தேடியபின்=சிரவண மனனாதிகளாற் றேடியபின்பு, தேக புத்தி தீர்ந்துபோய்=தேகம்யானென்னும் புத்தியானது கெட்டொழிந்து, சிற்சொரூபம்=ஞானசொரூபத்தை, யான் கூடுவனோ=நான் பொருந்துவேனோ, என்குறை தீர=எனது குறையானது நிவிருத்தியாகும் பொருட்டு, சொல்லுமென=பகர்ந்தருளவேண்டுமென்று தனஞ்சயன் கேட்க, (எ-று.)

வந்தவுடல் வேறுயும் வாசனையாற் றானெனலாற்
சந்தயமென் றற்சொரூபந் தானாதற் கென்றவரோ. (நிஉ)

(இ—ள்) வந்தவுடல்=(கன்மத்தின் காரியமாக) வந்திருக்கின்ற தேகமானது, வேறுயும் = தனக்கன்னியமாகவிருந்தும், வாசனையால்=தொன்றுதொட்டுள்ள பழக்கவாசனையால், தானெனலால்=(அதைத்) தானென்றறிந்து சொல்லுதலால், தன் சொரூபம் தானாதற்கு= தனது நிசவடிவந் தானாகுதற்கு, சந்தயம் என்=ஐயம் என்னே, என்றவரோ=என்று பகர்ந்தருளிய பகவானீர் தானே. (எ-று.)

சந்தேக=சந்தயமெனமரீஇயது.

தனுவைத்தா னெனும்பிரமை சத்தஞா னத்திலறு
தனுபவமெய்ஞ்ஞானத்தா லறும்வகையே துரையுமென. (நிங)

(இ—ள்.) தனுவைத் தானெனும் பிரமை=சரீரம்யானென்னும் மயக்கமானது, சத்தஞானத்தி லறுது=சாஸ்திரவிசாரணையாலுண்டாய பரோக்ஷஞானத்தால் நிவிருத்தியாகாமல், அனுபவமெய்ஞ்ஞானத்தால்=உண்மையனுபவமாகிய அபரோக்ஷஞானத்தால், அறும்வகையேது=நிவிருத்தியாகின்றவிதம் எப்படி, உரையுமென = (இதனைத்தேவரீர்) திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று தனஞ்சயன் கேட்க. (எ-று.)

விளக்குவிளக் கெனுமதனல் வெய்யவிருள் போய்விடுமோ
துளக்கமிலா விளக்கேற்றிற் றொலையுமிரு ளென்றவரோ. (நிச)

(இ—ள்.) *நிo. விளக்கு விளக்கெனுமதனல் = தீபந்தீப

*நிo. பரோக்ஷஞானத்தினிடத்து அசத்துவாபாதக ஆவரணத்தை நிவிர்த்திக்குஞ் சாமர்த்தியமிருக்கிறதேயன்றி, அபானுபாதக ஆவரணத்தை நிவிர்த்திக்குஞ் சாமர்த்தியமில்லை. யாதலால் அப்பரோக்ஷ ஞானத்தால் தேகம்யானென்னும் விபரீதஞானம் நீங்காதென்பதூஉம், அபரோக்ஷ ஞானத்தினிடத்து அபானுபாதக ஆவரணத்தை நிவர்த்திக்குஞ் சாமர்த்தியமிருத்தலா லவ்வபரோக்ஷ ஞானத்தால் தேகம்யானென்னு ஞானம் நீங்குமென்பதூஉந் தோன்றத், திருஷ்டாந்தத்துள்ள விருள் விளக்கெனும் வசனத்தா னீங்காதெனவும் விளக்கேற்றினனீங்குமெனவுங் கூறினர்.

மென்று பலகாலஞ் செப்புதலால், *ருக. வெய்யவிருள் போய் விடுமோ=கொடிய இருளானது நிவிருத்தியாகுமோ, (ஆகாது) *ருஉ. துளக்கமிலா விளக்கேற்றில்=அசைதலின்றிய தீபத்தை யேற்றினால், இருள்தொலையும் = அந்தகாரமானது நிவிருத்தியா கும், (அதுபோலப் பரோக்ஷ ஞானத்தால் தேகம் நான் என்னும் புத்தி நிவிருத்தியாகாது, அபரோக்ஷ ஞானத்தால் நிவிருத்தியா கும்,) என்றவரோ—என்றுரைத்தருளிய பகவானீர்தானோ. ()

எஞ்சிநின்ற தாஷ்டாந்தங்கள் விரிக்கப்பட்டன.

நெடுங்கால மான்மாவை நீங்காத வஞ்ஞானம்
விடுங்கால மெந்நாளோ மெய்ஞ்ஞானத் தாலெனவே. (ருரு)

(இ—ள்.) நெடுங்காலம் = வெகுகாலம், ஆன்மாவை நீங் காத = ஆன்மாவை விட்டுப்பிரியாத, அஞ்ஞானம் = அஞ்ஞான மானது, மெய்ஞ்ஞானத்தால்=உண்மை ஞானத்தால், விடுங்காலம் =விட்டு நீங்குகின்றகாலம், எந்நாளோ=எக்காலமோ, என = என்று தனஞ்சயன் கேட்க. (எ-று)

ஏகாரம் ஈற்றசை.

அந்தகாரங் குகையி லாயிரநா ளிருந்தாலுஞ்
செந்தீபங் கண்டவுடன் றீர்வதுபோ லென்றவரோ. (ருசு)

(இ—ள்.) அந்தகாரம்=பூதவிருளானது, குகையில்=மலை முழையின் கண்ணே, ஆயிரம் நாள்=வெகு காலமாக, இருந்தாலும் =இருந்திடினும், செந்தீபம்=செவ்விதாயவிளக்கை, கண்டவுடன் =கண்ட அக்கணத்திலேயே, தீர்வதுபோல் = நிவிருத்தியாதல்

---

*ருக. எஞ்சிய தாஷ்டாந்தத்துள்ள அஞ்ஞானமானது பிறப்பிறப்பு முத லிய சம்சாரத்துன்பத்திற்குக் காரணமாய் ஆத்மாவின் சொரூபத் தை மறைத்திருத்தலால், மிகப்பொல்லாததென்பதுதோன்றத் திரு ஷ்டாந்தத்துள்ளவிருளை **வெய்யவிருளென்றார்.**

*ருஉ. எஞ்சிய உபமேயப்பொருளாயஞானம் திடவபரோக்ஷமானமை யின் அது சகல விக்ஷேபங்களுமின்றிய தென்பது தோன்ற, உபமா னப்பொருளாய தீபத்தைத் துளக்கமிலா விளக்கென்றார்.

போல், (அஞ்ஞானம் வெகுகாலம் ஆன்மாவைவிட்டுப் பிரியாதிருக்கினும், ஞானமுதயமான வக்கணமே நிவிருத்தியாகும்) என்றவரோ = என்றுபகர்ந்தருளிய பகவானீர்தானே (எ-று.)

எஞ்சிநின்ற தாஷ்டாந்தங்கள் விரிக்கப்பட்டன.

கருமயோ கந்தவமே காரணமாய் நீங்காம
லருமையா ஞானம்வந்தோ வஞ்ஞானம் போமெனவே (ருஎ)

(இ—ள்) கருமம்=யாகாதி கருமங்கள், யோகம்=சித்தவிருத்தியி னிரோதவடிவயோகம், தவம் =(கிரிச்சிர சாந்திராயணாதி விரதங்களாலும், ஐந்தீ நடுவினிற்றல் முதலியவற்றாலும், உடலை வாட்டுதலாகிய) தவம் ஆகிய வினைகளைக், காரணமாக =ஏதுவாகக்கொண்டு, நீங்காமல்=விட்டு நீங்காமல், அருமையாம் ஞானம்வந்தோ=(மலவிக்ஷேபாதி தோஷங்களோடு கூடியவர்களால்) அடைதற்கருமையாய ஞானமுதயமான பின்புதானே, அஞ்ஞானம் போமென=அஞ்ஞானம் நீங்கு மென்று கானடைபன் கேட்க. (எ-று)

குத்துவெட்டும் படைகளினுற் கூடுமோ விருடூரக்க
வுத்தமமாம் ரவியுத்தித்தா லோடுமிரு ளென்றவரோ. (ருஅ)

(இ—ள்) குத்துவெட்டும் படைகளினல் = குத்துதற்கும் வெட்டுதற்குங் கருவிகளாயவாயுதங்களால், இருள்=பூதவிருள், துரக்க=நீக்குதற்கு, கூடுமோ=இயலுமா, (இயலாது:-கூடாது.) உத்தமமாம்=(உலகிற்கு எல்லாநலங்களையுங் கொடுக்கும்) உத்தமமான, ரவி=ஆதித்தன், உதித்தால்=உதையமானுல், இருளோடும் =இருள்நிவிருத்தியாகும், (அதுபோல அஞ்ஞானம் கன்மாதிகானிவிருத்தியாகாது, ஞானமுதையமானல் நிவிருத்தியாகும்) என்றவரோ=என்றுபகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று)

எஞ்சிநின்றதாஷ்டாந்தங்கள் விவரிக்கப்பட்டன.

அஞ்ஞானவிருடூரக்க வறியாத நல்லகன்ம
மெய்ஞ்ஞானந் தனைப்பலிக்கும் விதமெவ்வா றெனவினவ, (ருகூ)

(இ—ள்.) அஞ்ஞான இருள்துரக்க = அஞ்ஞானமாகிய அந்தகாரத்தை நீக்குதற்கு, அறியாத=தெரியாத, (ஜடமாயும்வலி யில்லாததாயுமுள்ள) நல்லகன்மம்=நற்கருமங்கட்கு, மெய்ஞ்ஞா னந்தனை=உண்மைஞானத்தை, பலிப்பிக்கும்விதம்—உதிப்பிக்குஞ் சொலானது, எவ்வாறெனவினவ=எப்படிக்கூடுமென்று விசயன் கேட்க, (எ-று.)

பலிக்குமென்பதில் பிறவினையையுணர்த்தும் பிவ்விகுதிதொ க்கு நின்றது.

கரும மிருவகையாங் காமியநிட் காமியமென்
றிருவகையி னிட்காம மேதுகா ணென்றவரோ. (௬௦)

(இ—ள்.) கருமம் = கருமமானது, காமியம் = * ௩௩. காமியகருமமென்றும், நிஷ்காமியம் = * ௩௪. நிஷ்காமியகரும

---

*௩௩. பலவிருப்பத்தோடு செய்யப்படுங்கன்மம் காமியகருமமாம். அது கூலியாளன் கூலியின்பொருட்டு எஜமானன் கட்டளையிட்டதைச் செய்துமுடித்தல்போல் போகத்தின்பொருட்டு, ஈசுவரனால் விதிக் கப்பட்ட சற்கருமங்களைச் செய்தலாம். போகமாத்திரமிதற்குப் பய னும். இது போகத்தின் விருப்பமுடையவனும் ஞானத்தில் விருப்ப மில்லாதவனுமான பகிர்முக புருஷனாற் செய்யத்தக்கதாம்.

*௩௪. பலவிருப்பமில்லாமற்செய்யப்படுங் கன்மம் நிஷ்காமிய கன்மமாம். அது கூலியாளன் கூலியின்பொருட்டன்றி, எஜமானன் பொருட் டாகவே, அவனிட்ட கட்டளையைச் செய்துமுடித்தல்போல, போக த்தை விரும்பாது ஈசுவரன்பொருட்டாகவே அவனால்விதிக்கப்பட்ட சற்கருமங்களைச் செய்தலாம். அந்தக்கரணசுத்தி இதற்குப் பயனும் காமிய கன்மத்திற்குப் போகபலனுண்டாவதுபோல, இந்நிஷ்கா மிய கன்மத்திற்கும் போகபலனுண்டாவது நியமமாமாயினும்,அது சிரவணமில்லாததினாலாவது, அல்லது வேறு காரணத்தினாலாவது. ஞானமுண்டாகாதவனுக்கு மாத்திரமாம். சிரவணத்தினால் ஞான முண்டாகிறவனுக்கு, கன்மபல போகமின்றாம். அது எவனுக்கு ஞானத்தில் விருப்பமிருந்தும், போகத்தில் புத்தி பதிந்திருத்தலால் சிரவணத்திற் பிரவிருத்தியுண்டாகிறதில்லையோ, அந்த மந்தஜிஞ் ஞாசுவினாற் செய்யத்தக்கதாம் ஜிஞ்ஞாசை—ஞானவிருப்பம்.அதை யுடையவன் ஜிஞ்ஞாசுவெனப்படுவன்.

மென்றும், இருவகையாம்=இரண்டுபிரிவாகும், இருவகையில் =இரண்டுபிரிவாய அக்கன்மங்களில், நிஷ்காமம்=நிஷ்காமிய கருமமானது, ஏது = ஞானத்தையுதிப்பித்தற்குக் காரணமாகும், காண்=(இதனைநீ)அறிவாயாக, என்றவரோ = என்றுபகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

கருமமே காரணமாய்க் கட்டுரைத்தீ ரிவ்வுலகை
யொருவும் வகையையெனக் கோதென் றடிபணிய. (௬௫)

(இ—ள்.) கருமமேகாரணமாய் = நிஷ்காமியகருமமே (ஞானத்தை யுதிப்பித்தற்கு) ஏதுவாமென்று, கட்டுரைத்தீர் = உறுதிமொழியுரைத்தருளினீர் (அது பொருத்தமுள்ளதாம்), இவ்வுலகை=பிரத்தியக்ஷமாகத் தோற்றுகின்ற விவ்வுலகத்தினின்றும், ஒருவும்வகையை=யான் பிரிகின்றவிதத்தை, ஓதென்று= திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று, அடி=திருவடிகளை, பணிய =தனஞ்சயன்வணங்க. (எ-று.)

ஐந்தனுருபு நிற்குமிடத்து இரண்டனுருபுநின்றது. உருபுமயக்கம்.

இந்திரசா லம்போல விவ்வுலகை நம்மிடத்திற்
றந்திரமாய்த் தோற்றுவித்தோஞ் சத்யமல வென்றவரோ. ()

(இ—ள்.) இந்திரசாலம்போல = ஐந்திரசாலிகன்காட்டும் பலவற்புத பதார்த்தங்களைப்போல, இவ்வுலகை = பலவிசித்திரங்களோடுகூடிய விப்பிரபஞ்சத்தை, நம்மிடத்தில் = சச்சிதாநந்த சொரூபமாகிய நம்மிடத்து, தந்திரமாய்= உபாயமாய், தோற்றுவித்தோம் = தோன்றுவண்ணஞ்செய்தோம், * ௫௫. சத்தியமல வென்றவரோ=இது உண்மையல்லவென்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

---

*௫௫. ஐந்திரஜாலிகன் செய்யும் வித்தையினாற் றோன்றிய புலி பாம்பு முதலானவைகள், தன்னைச் சூழ்ந்திருப்பனவாகக் கண்டு பயந்து இவைகளினின்றுயாம் நீங்கவேண்டுமென்று கருதிய பிராந்தன், இவை ஐந்திரசாலிக வித்தையினாற் றோன்றிய பொய்ப்பொருள்களென்றறிதலே அவைகளினின்று நீங்கியதாகுமென்பது போல, மாயையிற்றோன்றிய விப்பிரபஞ்சத்தைப் பொய்யென்றறிதலே, இப்பிரபஞ்சத்தினின்று நீங்கியதாகுமென்பது தோன்றச், சத்தியமல்ல வென்றார்.

மித்தையெனுஞ் சகத்துநின்பால் விளங்குமோ வெனவினவச்
சுத்திதனி லேரசிதந் தோன்றுதல்போ லென்றவரோ (௩௩)

(இ—ள்.) மித்தையெனுஞ்சகத்து = (சுவாநுபூதிமான்களாற்)பொய்யென்று சொல்லப்பட்ட பிரபஞ்சமானது, நின்பால் = தேவரீரிடத்தில், விளங்குமோவென வினவ = தோன்றுமோவென்று தனஞ்சயன்கேட்க, சுத்திதனில் = (மெய்யாயுள்ள) கிளிஞ்சிலினிடத்தில், ரசிதம் = (பொய்யாயுள்ள) வெள்ளியானது, தோன்றுதல்போல் = தோற்றுதல்போல (மெய்யாயுள்ள நம்மிடத்தில் பொய்யாயுள்ள பிரபஞ்சமானது தோன்றியதாம்), என்றவரோ = என்றுரைத்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

எஞ்சிநின்ற தாஷ்டாந்தங்கள் விரிக்கப்பட்டன.

அயல்வெள்ளி சுத்தியின்மே லாரோ பிதங்கூடு
மியலுள்ள சகமுமுன்வே றிருந்ததுமுண் டோவெனவே.(௩௪)

(இ—ள்.) அயல்வெள்ளி = வேறாயிருக்கின்ற வெள்ளியானது, சுத்தியின்மேல் = கிளிஞ்சிலினிடத்தில், ஆரோபிதங்கூடும் = கற்பிதமாகத் தோற்றுதல்பொருந்தும், (அதுபோல) இயலுள்ளசகமும் = காரணகாரியவொழுங்காயுள்ள பிரபஞ்சமும், முன் = சிருஷ்டிகாலத்திற்குமுன்பு, வேறு இருந்ததுமுண்டோ = பொய்ப்பிரபஞ்சத்துக்கு அன்னியமாக விருந்ததுமுளதோ, என = என்றுகாண்டீபன்கேட்க. (எ-று.)

மனமயக்கம் பிடிக்கிலில்லா வஸ்துவுந்தோன் றிடுமதுவோ
கனவில்விண்ணிற் றான்பறக்கக் கண்டதுபோ லென்றவரோ. ()

(இ—ள்.) மனமயக்கம் பிடிக்கில் = மனம்மோகத்தையடையுமானால், இல்லாவஸ்துவுந்தோன்றிடும் = இல்லாதபொருள்களும் பிரதீதியாகும், அது அங்ஙனம் பிரதீதியாதல், கனவில் = சொப்பனவத்தையில், விண்ணில் = வானில், தான் = (பறக்குஞ்செயலில்லாத புருடனாயுள்ள)தான், பறக்க = பறந்து செல்வதாகக், கண்டதுபோல் = பார்த்ததைப்போல, (சிருஷ்டிகாலத்திற்கு முன்னில்லாத பிரபஞ்சம் அஞ்ஞானதோஷத்தால் கற்பிதமாகத் தோன்றக்கூடும்), என்றவரோ = என்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. ()

எஞ்சிநின்ற தாஷ்டாந்தங்கள் விரிக்கப்பட்டன.

கனவுபோற் பிரபஞ்சமென்றீர் கண்விழித்தாற் கனவுபொய்யாம்
வினவுசகந் தினமுமெய்யாய் விளங்குவதென் சொல்லுமென. ()

(இ—ள்.) கனவுபோல் பிரபஞ்சமென்றீர் = சொப்பனம் போலப் பிரபஞ்சமும் (பொய்) யென்றுரைத்தீர், கண்விழித்தால்=நித்திரையினின்று நீங்கிச் சாக்கிரத்தையடைந்தால், கனவுபொய்யாம்=சொப்பனம் பொய்யாய்விடுகிறது, (அப்படியில்லாமல்) வினவுசகம்=என்னாற்கேட்கப்பட்ட விச் சாக்கிரப்பிரபஞ்சமானது, தினமும்=நாள்தோறும், மெய்யாய் விளங்குவது =சத்தியமாகப்பிரதீதியாவது, என்=யாதுகாரணம், சொல்லுமென= (இதனைத்தேவரீர் தயவுசெய்து) பகர்ந்தருளவேண்டுமென்று காண்டீபனகேட்க. (எ-று.)

மெய்யாக விளங்குவது மெய்ஞ்ஞானம் வருமளவும்
பொய்யாம்பின் கனவதுபோற் போதம்வரி லென்றவரோ. (கூஎ)

(இ—ள்.) மெய்யாக = (பிரபஞ்சமானது) உள்ளதாக, விளங்குவது = பிரதீதியாகிக்கொண்டிருப்பது, மெய்ஞ்ஞானம் வருமளவும் = உண்மைஞானமுதையமாகும் வரையினுமாம், போதம்வரில = ஞானமுதையமாகில், பின்=பின்பு, கனவது போல்=சொப்பனம் பொய்யாவதுபோல, பொய்யாம் = இச் சாக்கிரப் பிரபஞ்சமு மித்தையாய்விடும், என்றவரோ=என்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று)

முன்புகண்ட கனவுபொய்யா மொழிசாக்ரம் போலவென்றீர்
பின்புமுத்தித் திசையடைந்தும் பிரபஞ்சநிற்ப தேதெனவே.()

(இ—ள்.) மொழிசாக்ரம்=சொல்லப்படுகின்ற சாக்கிராவத்தையில், முன்புகண்ட = முதலிற்கண்ட, கனவு = சொப்பனமானது, பொய்யாம்போல் = மித்தையாய் விடுவதுபோல், (ஞானசாக்கிரத்தில் பிரபஞ்சமும் மித்தையாய்விடும்) என்றீர்= என்றுரைத் தருளினீர், முத்தித்திசையடைந்தும் = மோக்ஷநிலையையடைந்தும், பின்பு=பிற்பாடும், பிரபஞ்சநிற்பது=பிரபஞ்சம் பிரதீதியாகிக்கொண்டிருப்பது, ஏதென=எதனாலென்று காண்டீபன்கேட்க (எ-று.)

தெரிந்தவர்க்குத் தோற்றுவது தெத்தபடம் போல்வதல்லாற்
பரந்தசகங் காரியத்திற் பயன்படா தென்றவரோ. (௬௯)

(இ—ள்.) தெரிந்தவர்க்கு = (தனது நிசவடிவாய பிரஹ்ம சொரூபத்தை அபரோக்ஷமாக) அறிந்தவர்கட்கு, பரந்தசகம் = நாமரூபமாக விரிந்துள்ள பிரபஞ்சமானது, தோற்றுவது = பிரதீதியாவது, தெத்தபடம் போல்வதல்லால் = (நெருப்பினாற்) றகிக்கப்பட்ட வஸ்திரம்போன்றதாகுமே யல்லாமல், * ௩௯. காரியத்தில் = (ஜனனமரணமுதலிய) காரியங்களைத் தருதலில், பயன்படாதென்றவரோ = உபயோகப்படாதென் றுரைத்தருளிய பகவானீர்தானோ. (எ-று.)

கன்மவினை யஞ்ஞானங் கடந்துமதன் காரியமாம்
புன்மையுறு மெய்யுடனே போகாத தேதெனவே. (௭௦)

(இ-ள்) கன்மம் = ஆகாமிய சஞ்சிதகன்மங்களும், வினை அஞ்ஞானம் = சர்வகன்மங்களுக்கு முதற்காரணமாயுள்ள அஞ்ஞானமும், கடந்தும் = நிவிர்த்தியாகியும், அதன் காரியமாம் = அவ் வஞ்ஞானத்தின் காரியமாய, புன்மையுறுமெய் = இழிவு பொருந்திய தேகமானது, உடனே = கன்மமும் அஞ்ஞானமும் நிவர்த்தியான அக்கணத்திலேயே, போகாதது ஏதென் = ஒழியாதது எதனாலென்று தனஞ்சயன் கேட்க. (எ-று.)

வெட்டவிழு மரம்பசந்து விளங்குதல்போற் சிலகால
நட்டகன்ம மாய்ந்துமங்க நடித்திடுங்கா ணென்றவரோ. (௭௧)

(இ—ள்.) வெட்ட = (ஒருவன்) வெட்டுதலினால், விழும் = சாய்ந்துகிடக்கின்ற, மரம் = விருக்ஷமானது, பசந்து விளங்குதல்

*௩௯. நெருப்பினாற் றகிக்கப்பட்ட வஸ்திரமானது வஸ்திரம்போற்றோற் றமாயினும் அங்ஙனந்தோற்றுதல்மாத்திரமல்லது குளிர்நீக்குதல் முதலிய காரியங்கட் குபயோகமாகாததுபோலப், பிரஹ்மாத்ம ஐக்கிய ஞானத்தாற் பொய்யென்று தீர்மானிக்கப்பட்ட பிரபஞ்சமானது நாமரூபவடிவமாக ஞானிகட்குத் தோற்றினும். அங்ஙனந் தோற்றுதல் மாத்திரமல்லது பந்தமுதலிய காரியங்களைக் கொடுத்தற் கேதுவாகாமையின், காரியத்திற் பயன்படாவென்றார்.

போல் = (பின்சிறிதுகாலம்) பசுமையாக தோற்றிக்கொண்டிருப்பதுபோல, நட்டகன்மமாய்ந்தும் = (தான்முன்பு) செய்தகன்மம் நாசமாகியும், அங்கம் = (அக்கன்மத்தின் காரியமாய) தேகமானது, நடித்திடும் = தொழிற்பட்டுக்கொண்டிருக்கும், காண் = நீ அறிவாயாக, என்றவரோ = என்று பகர்ந்தருளிய பகவானீர் தாமோ. (எ-று)

சென்மம்போய் முத்தியினைச் சேரச் சிலரிருக்கத்
தொன்மையான் மாப்பலவோ சொரூபம் பகருமென. (எஉ)

(இ—ள்.) சென்மம்போய் = பிறப்பொழிந்து, முத்தியினை = மோக்ஷத்தை, சிலர்சேர = சிலர் அடைய, சிலரிருக்க = சிலர் (பந்தமுடையவரா) யிருக்கக் காணப்படுதலால், தொன்மை = அநாதியாயுள்ள, ஆன்மாப்பலவோ = ஆன்மாவானது அநேகமோ, சொரூபம் = ஆன்மாவின் சொரூபமித்தன்மைத்தாமென்பதை, பகருமென = மொழிதல் வேண்டுமென்று தனஞ்சயன் கேட்க. (எ-று.)

பிரமமென்று மீசனென்றும் பெருகுபல சீவனென்று
முரைமயக்க மலதான்மா வொருவனே யென்றவரோ. (எஙு)

(இ—ள்.) பிரமமென்றும் = (நிர்க்குணவடிவமாகிய) பிரஹ்மமென்றும், ஈசனென்றும் = முற்றறிவுடைமை முதலிய குணங்களோடு கூடியுள்ள ஈசுவரனென்றும், பெருகு = (அற்ப அறிவு முதலிய குணங்க) ணிரைந்துள்ள, பலசீவனென்றும் = அநேகம் ஜீவர்களென்றும், உரை = (பேதப்படுத்திக்) கூறுவது, மயக்கமலது = பிராந்தியே யல்லாமல். (வாஸ்தவம் அல்ல) ஆன்மாவொருவனே = ஆன்மா வொருவனென்று கூறுதலே (வாஸ்தவம்), என்றவரோ = என்றுரைத்தருளிய பகவானீர்தாமோ. (எ-று.) உரை-முதனிலைத் தொழிற்பெயர்.

ஏகந்தா னான்மா வெனும்வகையே மெய்யானு
லாகந்தா னும்பலவா யமர்ந்ததென்னோ சொல்லுமென. (எச)

(இ—ள்) ஆன்மா = ஆன்மாவானது, ஏகந்தான் = ஒன்றே, எனும்வகையே = என்றுசொல்லும்விதமே, மெய்யானால் = வா

ஸ்தவமானால், ஆகந்தோறும் = தேகங்கள்தோறும், பலவாய் = பல ஆன்மாக்களாக, அமர்ந்ததென்னே = பொருந்தியிருப்பதென்னையோ, சொல்லுமென = (இதனை) மொழிதல்வேண்டுமென்று தனஞ்சயன்கேட்க. (எ-று)

பலகடத்திற் சலத்தூடு பானுவிம்பந் தோன்றுதல்போற்
றொலைவில்புத்தி தொறுமான்மாத் தோன்றுதல் காணென்றவரோ.

(இ-ள்.) பலகடத்தில் = அநேககடங்களிலுள்ள, சகத்தூடு = சலங்களினிடத்தே, பானுவிம்பம் = சூரியபிம்பமானது, தோன்றுதல்போல் = (அநேகமாகப் பிரதிபிம்பத்துத்) தோன்றுகிறதுபோல, தொலைவில் புத்திதோறும் = மோக்ஷ பரியந்தம் அழிவில்லாத புத்திகள்தோறும், ஆன்மா = (ஒன்றாகவேயிருக்கிற, ஆத்மாவானது, தோன்றுதல் = (பல ஆத்மாக்களாகத்) தோன்றுதலை, காண் = நீயறிந்துகொள்வாயாக, என்றவரோ = என்று மொழிந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

ஆதித்தன் போலான்மா வளவில்புத்தி தொறுந்தோன்றிற்
சாதிக்கு முத்தியெவர் தமக்கதனைச் சாற்றுமென. (௭௬.)

(இ-ள்.) ஆதித்தன்போல = (ஒன்றாகவிருந்தும் உபாதிகளின் பேதத்தாற் பலவாகத் தோற்றுகிற) சூரியனைப்போல, ஆன்மா = ஏகமாயுள்ள ஆத்மாவானது, அளவில்புத்திதொறும் = அளவில்லாத புத்திகளாகியவுபாதிகள்தோறும், தோன்றில் = பலவாகத் தோன்றுமானால், சாதிக்கு முத்தி = சிரவணமனனாதியப்பியாசத்தாலடையத்தக்க மோக்ஷமானது, எவர் தமக்கு = யாவருக்கு, அதனைச் சாற்றுமென, அதனையுரைத்தருளவேண்டுமென்று தனஞ்சயன் கேட்க. (எ-று.)

பந்தமுத்தி தானுமந்தப் பரந்தபுத்தி தனக்கேயா
மந்தவிம்பந் தனக்கிலையென் றறிவுவரச் சொன்னவரோ. (௭௭)

(இ-ள்.) *௩௭. பந்த *௩௮. முத்திதானும் = பந்தமும் மோக்ஷமும், அந்த = முன் சொல்லிய, பரந்தபுத்தி தனக்கே

---

*௩௭. அகங்காரமுதலிய அநாத்மவஸ்துக்கள் பந்தமெனப்படும்.

*௩௮. சர்வதுக்கநிவிர்த்தி பரமாநந்தப்பிராப்தி முத்தி அல்லது மோக்ஷமெனப்படும். அல்லது கர்த்திருத்துவ போகதிருத்துவாதி வேற்றுத் தன்மையை விட்டுத் தனதுசொரூபமாக நிலைத்திருத்தல் மோக்ஷமெனப்படும்.

யாம் = (விடயங்களில்) விரிந்து செல்லுகின்ற புத்திதத்துவத்திற் கேயாகும், அந்த = (ஒன்றாகவிருந்தும் புத்திகளாகிய வுபாதிகளின் பேதத்தாற் பலவாகத்தோற்றுகிறதென்று) முன்கூறிய, விம்பந்தனக்கு = பிம்பவடிவாய ஆத்மாவிற்கு, இலையென்று = பந்தமோக்ஷங்களில்லையென்று, அறிவுவர = திடபோதமுதையமாம் வண்ணம், சொன்னவரோ = பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

பரமேக மாயுமதிற் பலசீவ ரேதெனவே
யொருகடலிற் பலகுமிழி யுதிப்பதுபோ லென்றவரோ (எஅ)

(இ—ள்.) பரம் ஏகமாயும் = பிரஹ்மம் ஒன்றாகவிருந்தும், அதில் = அந்தப் பிரஹ்மத்தில், பலசீவர் = அநேகஞ் சீவர்கள், ஏதென = தோன்றுவதெப்படியென்று தனஞ்சயன் கேட்க, ஒரு கடலில் = ஒன்றாயுள்ள சமுத்திரத்தினிடத்தே, பலகுமிழி = அநேகங் குமிழிகள், உதிப்பது போல் = (வாயுவின் செயலாற் றோற்றல் போல) ஒன்றாயுள்ள பிரஹ்மத்தில் கன்மச்செயலாற் பலசீவர்கள் தோற்றுவார்கள், என்றவரோ = என்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

சீவனது தானென்றுஞ் சேரும் பிரமமென்று
மாவதுவோ பேரின்ப மாங்கதெனக்கோதுமென. (எகூ)

(இ—ள்.) சீவன் = சீவனே, தானென்றும் = தானென்னு முணர்ச்சிக்குஞ் சொல்லிற்கும் பொருளென்றும், அது = அச்சீவன், பிரமம் = பிரஹ்மத்தை, சேருமென்றும் = அடையுமென்றும் (சிலர் சொல்லுகிறபடி), ஆவதுவோ = ஆவதுதானோ, பேரின்பம் = பிரஹ்மாநந்தம், அது = அப்பிரஹ்மாநந்தம் (உதையமாகும் விதத்தை), எனக்கு = அடியேனுக்கு, ஓதுமென = பகர்ந்தருளவேண்டுமென்று தனஞ்சயன் கேட்க. (எ-று.)

ஆங்குஅசை. பிரஹ்மமென்பதில் சாரியையும் ஐயுருபுந் தொக்கன.

ஏகம் பிரம மிரண்டிலை நீ வேறுமல
சோகமுறும் பேதமதிற் றோன்றுமின்பமென்றவரோ. (அ௦)

(இ—ள்.) ஏகம்பிரமம் = பிரஹ்ம ஒன்றேயுள்ளதாகும், இரண்டிலை = இரண்டாவது பொருளில்லை, நீ = (பிரத்தியகாத்மாவாகிய) நீ, வேறுமல = அப்பிரஹ்மத்துக்கு அன்னியமுமல்ல, சோகமுறும் = துக்கம் வந்து பொருந்துதற்கேதுவான, பேதமறில் = வேறுபாட்டுணர்ச்சி நீங்குமாயின், இன்பம் = பிரஹ்மானந்தமானது, தோன்று மென்றவரோ = உதையமாகு மென்றுரைத்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

சீவபேதம்போமோ சித்தொன்று மோவெனவே
யாவன்மனமறுஞ்சுழுத்தி யவத்தையிற்பா ரென்றவரோ. (அக)

(இ—ள்.) சீவபேதம் = சித்தினிடத்திற்றோற்றிய சீவர்களின் பேதமானது, போமோ = நிவிர்த்தியாமோ, சித்து = அங்ஙனம் பேதம் நீங்கப்பெற்ற சித்தானது, ஒன்றுமோ = ஏகமாயிருந்து விளங்குமோ, என = என்று தனஞ்சயன் கேட்க, ஆவல் = விடயங்களில் பற்றுள்ள, மனம் = மனமானது, அறும் = அஞ்ஞானத்திலொடுங்குகின்ற, சுழுத்தியவத்தையில் = சுழுத்திகாலத்தில், பாரென்றவரோ = பார்ப்பாயாக வென்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

பேதமல விவ்வுலகம் பிரமமய மென்றறிந்தும்
பூதமய மாய்த்தோற்றல் போகாத தேதெனவே. (அஉ)

(இ—ள்.) இவ்வுலகம் = இப்பிரபஞ்ச மானது, பேதம் அல = (பிரஹ்மத்துக்கு) அன்னியமல்ல, பிரமமயமென் றறிந்தும் = பிரஹ்மசொரூபமே யென்றறிந்திருந்தும், பூதமயமாய்த் தோற்றல் = பஞ்சபூத ஆகாரமாகத் தோற்றுதல், போகாதது = நீங்காதது, ஏதென = எதனாலென்று காண்டீபன்கேட்க. (எ-று)

கானலை நீரென்றோடிக் கண்டவர்க்குத் தீர்ந்தபின்னும்
வானுலவு நீராகி வயங்குதல்போ லென்றவரோ. (அங)

(இ-ள்) கானலை = பேய்த்தேரினை, நீரென்றோடி = சலமென்றுணர்ந்து சென்று, கண்டவர்க்கு = (இது நீரன்றுகானலென) றறிந்தவர்க்கு, தீர்ந்தபின்னும் = (நீரென்னு மயக்கம்) நிவிர்த்தியானபிற்பாடும், உலவு = செலலுகின்ற, வான் நீராகி = மேகம்பொழிந்த சலம்போலாகி, வயங்குதல்போல் = பிரதீதியா

வதுபோல, (பிரபஞ்சத்தைப் பிரஹ்மவடிவமாக அறிந்திருக்கினும் பஞ்சபூதவடிவுமாகத் தோற்றிக் கொண்டிருக்கும்) என்றவரோ = என்று பகர்ந்தருளியபகவானீர்தானே. (எ-று)

எஞ்சிநின்ற தாஷ்டாந்தம் விரிக்கப்பட்டது, மயக்கமென்னும்பதம அவாய் நிலையால் வந்தது.

அறிவானு நல்லறிவு மறியப் படும்பொருளும்
பிறிவாய்மூன் றுயிருத்தல் பேதமல வோவெனவே. (அச)

(இ-ள்) அறிவானும் = ஞாதிருவும், நல்லறிவும் = நன்மையைத்தரும் ஞானமும், அறியப்படும்பொருளும் = அறியப்படுவதாகிய ஞேயமும், பிறிவாய் = ஒன்றைவிட மற்றொன்று வேறாய், மூன்றுயிருத்தல் = திரிபுடியாக விருத்தலானது, பேதமலவோ = (பொருளொன்றேயென்னும் அத்துவித சித்தாந்தத்துக்கு) விரோதமல்லவோ வென்று தனஞ்சயன் கேட்க. (எ-று.)

சொப்பனத்திற் றனித்தொருவன் தோற்றம்போ லில்லையங்கே
கற்பனையாம் பொருளறிவு காண்பவன்போ லென்றவரோ. (அரு)

(இ-ள்) தனித்தொருவன் = தனித்து நித்திரைசெய்கின்றவொருவனது, சொப்பனத்தில் = சொப்பனாவத்தையில், தோற்றம்போல = தோற்றுகின்ற திரிபுடிகள் (அச்சொப்பன *௩௯. திருஷ்டாவுக்கன்னியமாக வில்லாதன) போல, கற்பனையாம் = அத்தியாசமாகிய, பொருள் = ஞேயமும், அறிவு = ஞானமும், காண்பவன் = ஞாதிருவும், வேறில்லை யென்றவரோ = *௪௦. சாக்ஷிசைதன்னியத்துக்கு அன்னியமாகவில்லை யென்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று)

அங்கு ஏ அசைநிலைகள்.

கற்பனையாம் பேதங்கள் காணும்ற் பேர்ம்வகையை
விற்பனமா யானறிய விளம்புமென வேவணங்க. (அசு)

---

* ௩௯. பார்க்கிறவ னெவனோ அவன் திருஷ்டாவெனப்படுவன். ஆத்மா எல்லாத திருசியங்களையும் பார்க்கிறதா யிருத்தலால் திருஷ்டாவாம்.

* ௪௦. அறிபவன், அறிவு, அறியப்படுபொருள் முதலியவற்றின் உற்பத்தி நாசங்களையறிவதாய்த்தான் அவ்வுற்பத்தி நாசங்களின்றியதாய்ச், சுயஞ்சோதியாயுள்ள சேதனமெதுவோ, அது சாக்ஷியெனப்படும்.

(இ-ள்) கற்பனையாம் பேதங்கள் = ஆரோபமாகிய திரிபுடிப்பேதங்கள், காணுமற்போம் வகையை = பிரதீதியாகாமற் போகும் விதத்தை, விற்பனமாய் = விசேஷமாக, யான் அறிய = அடியேன் தெரிந்துகொள்ளும்பொருட்டு, விளம்புமென = பகர்ந்தருளவேண்டுமென்று, வணங்க = காண்டீபன் கைகூப்ப. (எ-று.)

துரியமாம் யோகத்தாற் றூயமனம் லயமாகு
லரியமூ வகைவிகற்ப மழியுமென்று சொன்னவரே. (அஎ)

(-உள்) துரியமாம் = நனவிற் சுழுத்தியவத்தையை யடைதற்கேதுவாய, யோகத்தால் = (* சக. லயம் * சஉ. விக்ஷேபம் * சங. கஷாயம் * சச. ரசாஸ்வாதமென்னும் நான்குதடைகளுமில்லாமற்றியானிக்கின்ற) நிதித்தியாசனத்தால், தூயமனம் =

---

* சக. நித்திராசேஷம், அஜீரணம், அதிகபோஜனம் சரீரசிரமமுதலிய வேதுக்களால், ஆலஸ்யம், சோம்பல், நித்திரைமுதலானவைகளுண்டாகின்றன. அதனால் விருத்தி தனதுபாதானமாகிய அந்தக்கரணத்தி லொடுங்குகிறது. இந்நிலைமைக்கு லயமென்றுபெயராம். இந்த லயத்தால் சுழுத்தியை யொத்த அவஸ்தையுண்டாகிறது. பிரஹ்மானந்தம் விளங்குகிறதில்லை. ஆதலால் யோகி சாவதானப்பட்டு ஆலஸ்யாதிகளுக்குக் காரணமான நித்திராசேடமுதலானவைகள் நேராமல் முன்சாக்கிரதைப்படுவதுமன்றி, யோகத்திற் பிரவேசித்த அக்காலத்திலும் நித்திரை முதலியவற்றைத் தகைந்து விருத்தியையெழுப்பவேண்டும். இவ்வாறு லய வடிவ விக்கினத்துக்கு விரோதியான நித்திரை ஆலஸ்யங்களின் நிரோதத்தோடுகூடிய விருத்தியின் பிரவாகவடிவ ஜாகரணத்தி (விழிப்பி)னைக் கௌடபாதாசாரியர் சித்தசம்போதனமென்பர்.

* சஉ. சிட்டுக்குருவிகள் பூனை முதலானவற்றின் பயத்தால் வீட்டிற்குட் பிரவேசிக்கின்றன. அக்காலத்தில் கிரகத்திற்குள் பயக்கிலேசங்களுக்கு இடங்காணப்படுகிறதில்லை. மறுபடியும் வெளியில்வந்து பயத்தை யல்லது மரணவடிவ துக்கத்தை யடைகின்றன. அதுபோல் அநாத்ம பதார்த்தங்களைத் துக்கமென்றறிந்து அத்வைதாநந்தத்தை விஷயமாக்குவதற்காக விருத்தியந்தர்முகமாகின்றது. அங்கு விருத்திக்கு விஷயமாகுஞ்சேதனம் அதிசூக்ஷ்மமாக விருத்தலால், விருத்தி நிலைபெறுகிறதில்லை. சிறிதுகாலமாவது நிலைத்தாலன்றி அந்

சுத்தமாகியசாத்துவீகமனதும், லயமானால் = பிரஹ்மசொரூபாகாரமாக ஒடுங்குமானால், அரிய = (பிறவுபாயங்களால் நீக்குதற்கு) அருமையாயுள்ள, மூவகைவிகற்பம் = திரிபுடிவேறுபாடுகள், அழியுமென்று = தோற்றமின்றிக்கெடுமென்று, சொன்னவரோ = பகர்ந்தருளிய பகவானீர்தானோ. (எ-று.)

சிறந்திருக்கு மான்மாவுஞ் செகமெல்லா நிறைந்திருந்து
மறைந்தெனக்குத் தோன்றாத வகையேது சொல்லுமென. (௮௮)

(இ-ள்.) சிறந்திருக்கும் = (சச்சிதானந்தவடிவமாய்ச்) சிறந்திருக்கும், ஆன்மாவும் = ஆத்மாவும், செகமெல்லாம் = உலகமுழுதினும், நிறைந்திருந்தும் = பூரணித்திருந்தும், மறைந்து = ஒளிந்து, தோன்றாத = பிரதீதியாகாதிருக்கின்ற, வகை = விதம், எது = யாதினால், சொல்லுமென = அதனைப் பகர்ந்தருளவேண்டுமென்று தனஞ்சயன் கேட்க. (எ-று.)

சத்துச்சித் தானந்தந் தான்மூன்று மகனுடனே
யொத்துற்று நாம வுருவஞ் சகமாகி. (௮௯)

---

தர்முக மானவுடனே சேதன சொருபானந்தத்தின் லாபமுண்டாகிறதில்லை. அதனால் விருத்தி பகிர்முகமாகிவிடுகிறது. இவ்வாறு பகிர்முகமாகும் விருத்திக்கு விக்ஷேபமென்று பெயராம். அந்தவிருத்தியின் ஸ்திரத்தன்மையின்றிச் சொருபானந்தம் அடையப்படுகிறதில்லையாதலால் அந்தர்முகவிருத்தியுண்டானாலும் எவ்வளவுகாலம் விருத்தி பிரஹ்மாகாரமாகவில்லையோ அவ்வளவுகாலம் யோகி பாஹ்ய பதார்த்தங்களில் தோஷபாவனையால் விருத்தியைப் பகிர்முகமாகவிடுகிறதில்லை. ஆனால் அந்தர்முகத்தன்மையிலேயே நிறுத்துவன். இவ்விக்ஷேபரூபவிக்கினத்துக்கு விரோதியானயோகியின் பிரயத்தனத்தைக் கௌடபாதாசாரியர் சமமென்று கூறுவர்.

. இராகாதி தோஷத்தினைக் கஷாயமென்பர்.

. யோகிக்குச் சமாதியில் விக்ஷேபத்தாலுண்டான துக்கநிவிர்த்தியினால் எந்த ஆநந்த முண்டாகிறதோ அதன் அநுபவம் ரஸாஸ்வாதமெனப்படும். இவற்றின் விரிவை விசாரசாகரத்திற் பார்க்க.

(இ-ள்) *சஅ சத்து *சகூ சித்து *சஎ ஆனந்தம் மூன்று தான் = இருப்பு விளக்கம் பிரியமென்னும் மூன்றும் ஆன்மாவின் சொரூபவிலக்கணங்களாம், அதனுடனே = (அச்சச்சிதாநந்த விலக்கணமுடைய ஆன்மாவாகிய) பிரஹ்மத்தோடு, நாமவுருவம் = நாமமும் ரூபமுமாகியவிரண்டும், ஒத்துற்று = சம்பந்தித்து, சகமாகி = உலகமாகி. (எ-று)

இருக்கையினிற் றோன்று திவைமூன்றும் பிரமமென
மரிக்கில்வரும் பின்னிரண்டு மரிசகமென் றுரைத்தவரோ. (சுய)

(இ-ள்.) இருக்கையினில் = இருக்கின்றசனுல். தோன்றுது = (ஆன்மாவாகிய பிரஹ்மம்) விளங்கமாட்டாது, இவை மூன்றும் = (சச்சிதாநந்தமாகிய) இவைகள் மூன்றும், பிரமமென = பிரஹ்மத்தின் சொரூபவிலக்கணமெனவும், பின்னிரண்டும் = பின்பு சொல்லிய நாமரூபமாகிய விரண்டும், மரிசகமென்றும் = நாசமாகத்தக்க பிரபஞ்சத்தினிலக்கண மெனவும், மரிக்கில் = சிந்தித்தால், வரும்—(உனக்கு ஆன்மவடிவப் பிரஹ்மம் விளங்கும்படி)வரும், என்று உரைத்தவரோ = என்று வுரைத்தருளிய பகவானீர்தானோ. (எ-று.)

அறிந்துகொண் ஞானத்தாலே யான்மாவை யென்றுரைத்தீர்
சிறந்தொளிரு மான்மாவுந் திரிசியமா மோவெனவே. (சுக)

---

*சஅ இருக்கிறதென்று கேட்கப்படும் உணர்ச்சிக்கு விஷயமாயுள்ளது சத்தாம். அல்லது அசத்தென்று சொல்லக்கூடாதது சத்தாம் அல்லது மூன்றுகாலத்திலும் பொய்யென்று நிச்சயிக்கப்படாதது சத்தாம் அல்லது மூன்றுகாலத்திலும் வியாபித்திருப்பது சத்தாம். அல்லது எது இருக்கிறதோ அது சத்தாம். அல்லது ஒ்ரே அத்விதீயமாயுள்ளது சத்தாம் அல்லது சஜாதீய விஜாதீய சுவகதபேதமில்லாதது சத்தாம் சத்து சத்தியம், உண்மை, வாஸ்தவம் என்பன ஒருபொருள்,

*சகூ சுயம்பிரகாசம் சித்தாம் அல்லது எல்லாவற்றையும் பிரகாசிப்பது சித்தாம் அல்லது ஆவரணமின்றியசின்மாத்திரம் சித்தாம். அல்லது அநாதி அநந்தமாய் நிரந்தரம் விருத்தியின்றியவிடத்திருக்குஞ் சாக்ஷி சைதன்னியஞ் சித்தாம். சித்து ஞானமென்பன ஒருபொருள்.

*சஎ. பரமப் (எல்லாவற்றினுமதிகப்) பிரீதிக்கு எது விஷயமோ அது ஆநந்தமாம்.

(இ-ள்.) ஆன்மாவை = ஆத்மசொரூபத்தை, ஞானத்தாலே = உண்மை ஞானத்தால், அறிந்துகொள்ளென்றீர் = தெரிந்துகொள்வாயாகவென்று மொழிந்தருளினீர், சிறந்தொளிரும் = மிகப்பிரகாசிக்கும், ஆன்மாவும் = ஆத்மாவும், திரிசியமாமோவென = (பிரபஞ்சத்தைப்போல) விஷயமாகுமோவென்று காண்டீபன் கேட்க. (எ-று.)

ஆன்மாவுமென்ற எச்சவும்மையால் பிரபஞ்சத்தைப்போலவென விரிக்கலாயிற்று.

முந்திய ஞானத்தாலே முதிருமஞ்ஞானந்துறக்கிற்
சிந்தையிலான்மாச்சுயமாய்த் திகழுமென்று சொன்னவரோ. ()

(இ-ள்.) முந்தியஞானத்தாலே = முதன்மையாயுள்ள தத்துவஞானத்தால், முதிரும் = அநாதியாகவிருந்துள்ள, அஞ்ஞானந் துறக்கில் = அஞ்ஞானத்தை நிவிர்த்திக்கில், சிந்தையில் = சித்தத்தினிடத்து, ஆன்மா = ஆத்மாவானது, சுயமாய்த்திகழுமென்று = தானாய்ப் பிரகாசிக்குமென்று, சொன்னவரோ = பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

இனியமுத்திச் சுகமிருப்ப தெப்படியென் றேவினவ
வனுபவத்தி லறிவிடயா னந்தம்போ லென்றவரோ. (௬௩)

(இ-ள்.) இனியமுத்திச் சுகமிருப்பது = மேன்மையாகிய மோக்ஷானந்தமிருக்கிறது, எப்படியென்று வினவ = எத்தன்மையாமென்று காண்டீபன் கேட்க, விடயானந்தம்போல = விஷயசுகத்தை (யனுபவித்தறிவது) போல, அனுபவத்தில் அறி = (மோக்ஷாநந்தத்தையும்) உனது சுவானுபவத்தாலறிந்துகொள்வாயாக, என்றவரோ = என்றுபகர்ந்தருளிய பகவானீர்தானே (எ-று.)

மனலயம்வந் தவரலது மற்றிலரோ முத்தரெனச்
சனகனைப்போற் சீவன்முத்தர் தாமுமுள ரென்றவரோ. (௬௪)

(இ-ள்.) மனலயம்வந்தவரலது = மனோநாசம்வரப்பெற்றவர்களே ஜீவன்முத்தர்களல்லாமல், மற்றுமுத்தர் இலரோ =

(மனோ நாசம் வறப்பெறாத) ஏனையோர் முத்தராகார்களோ, என = என்று காண்டீபன் கேட்க, சனகனைப்போல் (இராச்சியபால னாதிவியவகாரங்களைச் செய்துவந்த) சனகராசனைப்போல் சீவன் முத்தர் தாமும், (மனோலயம்வாராத பிரஹ்ம வித்துக்களாகிய) சீவன் முத்தர்களும், உளரென்றவரோ = இருக்கின்றாரென்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று)

சீவன்முத்தி யடைந்தோர்கள் செயலுமவர் தங்குணமு
நாவுரைக்கும் வாசகமு நானறியச் சொல்லுமென. (௬௫)

(இ-ள்) சீவன் முத்தியடைந்தோர்கள் செயலும் = (ஞானத்தை யடைந்து பிறப்பறுத்திருத்தலாகிய) ஜீவன் முத்தியடைந் தோர்களது செய்கைகளும், அவர் தம் குணமும் = அவர்கள் பொருந்தியுள்ள குணங்களும், நாவுரைக்கும் வாசகமும் = அவர்கள் நாவினாற் கூறுகின்ற வார்த்தைகளும், நான் அறியச் சொல்லுமென = அடியேன் தெரிந்துகொள்ளும்படியாகப் பகர்ந்தருள வேண்டுமென்று காண்டீபன் கேட்க. (எ-று)

வருங்கருவு பிறப்பினொடு வளர்தல்பருத் தல்குறைத
லொருங்கலுமெய்க் கென்றதனை யொறுத்திருப்பாரென்றவரோ

(இ-ள்) வரும் = (கன்மத்துக்குத் தகுந்தபடி) வராநின்ற, கருவு = கருப்பமும் (மாதாவின் வயிற்றிற் றங்கியிருத்தலும்), பிறப்பினொடு = (பூமியில்) உற்பவித்தலோடு, வளர்தல் = விர்த்தியாதலும், பருத்தல் = பெருத்தலும், குறைதல் = சிறுகலும (சுருங்குகலும்), ஒருங்கலும் = கெடுதலும்மாய (ஆறு) விகாரங்கள், மெய்க்கென்று = உடம்பிற்கே யென்றறிந்து, அதனை = அவ்வுடம்பினை, ஒறுத்திருப்பா ரென்றவரோ = (யான் எனதென்று பற்றாது) வெறுத்திருப்பார்களென்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

பார்ப்பதுவுங் கேட்பதுவும் பகர்வதுவுஞ் செல்வதுவு
மோர்ப்பதுவுங் காணதன்ம மெனப்புகல்வா ரென்றவரோ. (௬௭)

(இ-ள்) பார்ப்பதும் காணுதலும், கேட்பதுவும் = கேட்டலும், பகர்வதுவும் = பேசுதலும், செல்வதுவும் = போதல் வரு

தலும், ஏற்பதுவும் = வாங்குதல் கொடுத்தலும் கரண தன்ம மெனை = (ஞானேந்திரிய கன்மேந்திரியங்களாகிய) காணங் களின் தொழில்களென்று, புகல்வார் = செல்லுவார்கள் என்றவரோ = என்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று)

பசிதாக முயிர்க்கெனவே பயந்துக்கஞ் சுகங்காமம்
வசிகோப மதிக்கெனவே மகிழ்ந்திருப்பா ரென்றவரோ. (௯௯)

(இ-ள்.) பசி = பசித்தலும், தாகம் = நீர்வேட்கையும், உயிர்க்கெனவும் பிராணவாயுவுக்கெனவும், பயம் = அச்சமும். துக்கம் = துன்பமும், சுகம் = இன்பமும், காமம் = இராகமும், மும், வசிகோபம் = குற்றம் பொருந்திய சினமும், மதிக்கென = புத்திக்கெனவும், ஆத்மாவிற்கில்லையெனவும் அறிந்து) மகிழ்ந் திருப்பார் = எப்பொழுங் களித்திருப்பார்கள் என்றவரோ = என்று பகர்ந்தருளிய பகவானீர்தானே (எ-று)

வீடுந்தா ரமுமுறவு மேவியென்று மிருந்தாலும்
நீடுந்தா மரையிலைநீர் நிகராவா ரென்றவரோ. (௧௦௦)

(இ-ள்.) வீடும் = மனையினோடும், தாரமும் = இல்லாளோ டும், உறவும் = தன்னினத்தாரோடும், என்றும் = எப்பொழுதும், மேவியிருந்தாலும் = சம்பந்தித்திருந்தாலும், நீடும் = செழித்தி ருக்கும், தாமரை இலை நீர் நிகராவார் = பங்கயத்தளத்தின்கண் தங்கிய ஜலம்போல (பொருந்தியும் பொருந்தா) திருப்பார்கள், என்றவரோ = என்றுரைத்தருளிய பகவானீர்தானே. (எ-று)

பற்றிடுங்கா யமுந்தானும் பன்னாளொன் றாயினும்பி
னுற்றபுளி யம்பழமு மோடுமொப்பா ரென்றவரோ. (௧௦௦)

(இ-ள்.) பற்றிடுங்காயமும் = (அஞ்ஞானகாலத்தில் யான் எனதென்று) அபிமானிக்கப்பட்டிருக்கின்றன தேகமும், தானும் = (பிரஹ்மவடிவமாகிய) ஆத்மாவும், பன்னாள் = பலகாலம், ஒன்றாயினும் = அபேதமாக விருந்திடினும், உற்றபின் = தத் துவ ஞானத்தை யடைந்தபின்னர், புளியம்பழமுமோடுமொப்பார் = புளியின் கனியுமதனோடும்போலப் பற்றின்றியிருப்பார்கள், என்றவரோ = என்று பகர்ந்தருளிய பகவானீர்தானே (எ-று)

கூறுமுல கியற்கையுடன் கூடினும்மெய்ஞ் ஞானம்வந்தோர்
சேறும்பிள்ளைப் பூச்சியும்போற் றிரிவார்கா ணென்றவரோ ()

(இ-ள்.) மெய்ஞ்ஞானம் வந்தோர் = தத்துவஞானமுடைய மாகிய பெரியோர்கள், கூறும் = சொல்லப்படுகின்ற, உலகியற்கையுடன் = உலக வழக்கத்துடனே, கூடினும் = சேர்ந்தாலும், சேறும் பிள்ளைப்பூச்சியும்போல் = அளறும் (அதில் வாசபண்ணும்) பிள்ளைப்பூச்சியும்போல, திரிவார்காளென்றவரோ = (சம்மந்தியாமல்) உலாவுவார்களென்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

ததியூடு கடைந்தவெண்ணெய் தான்மோரிற் கிடப்பதுபோன்
மதியோடு கூடினும்பின் மயங்கார்கா ணென்றவரோ. (கOஉ)

(இ-ள்.) ததியூடு = தயிரினிடத்து, கடைந்த வெண்ணெய் =கடைதலா லெழுந்த வெண்ணெயானது, மோரில்=மோரினிடத்தே, கிடப்பதுபோல் = பற்றின்றிக்) கிடத்தல்போல, பின் = மெய்புணர்வு வுடையமான பின்பு, மதியோடு கூடினும் = புத்தியோடு பொருந்தியிருப்பினும், மயங்கார் = (அப்புத்தி தத்துவம் யான் எனது என்னும்) மயக்கத்தை யடையார்கள், காண் = நீயறிவாயாக, என்றவரோ = என்று பகர்ந்தருளிய பகவானீர்தானே. (எ-று.)

அருச்சுனன்றன் பொருட்டாக வனைவருக்கும் ஞானம்வரப்
பொருந்தியதே சிகவடிவாம் புண்ணியரே கண்வளரீர். (கOரு)

(இ-ள்.) அருச்சுனன் றன்பொருட்டாக = தனஞ்சயனிமித்தமாக, அனைவருக்கும் = எல்லாமுமுட்சுக்களுக்கும், ஞானம் வர = போதமுண்டாகும்படி, பொருந்திய = இயைந்தருளிய, தேசிகவடிவாம்=ஆசிரியவடிவமாகிய, புண்ணியரே=தருமமூர்த்தியே, கண்வளரீர் = துயின்றருள்வீராக. (எ-று.)

ஆயர்குல மாத ரளவிலோ ரைப்புணர்ந்துந்
தூயபதி னாறு யிரவருடன் றோய்ந்திருந்தும். (க ச)

(இ-ள்) ஆயர்குலமாதர் = இடையர்குல மங்கையர்கள், அளவிலோரைப் புணர்ந்தும் = எண்ணிறந்தவர்களைப் புல்லியும்,

தூப = சுத்தமாகிய, பதினாறுயிரவருடன் = பதினாறுயிரம் இராஜ மங்கையர்களோடும், தோய்ந்திருந்தும் = கலந்திருந்தும். (எ-று)

பரம முனிவர் முன்னே பரிச்சித்தைத் தீண்டிபன்று
பிரமசரியஞ்செலுத்தும் பேரொளியே கண்வளரீர். (கo௫)

(இ-ள்.) பரம முனிவர் முன்னே = மேலாய தவத்தினர் முன்பாக, பரிச்சித்தைத்தீண்டி = பரிக்ஷித்திராசனைத் தொட்டு, அன்று = அந்நாளில், பிரமசரியஞ்செலுத்தும், பிரமசரியத்தி னியல்பைக் காட்டிய, பேரொளியே = வியாபக சைதன்னியமே, கண்வளரீர் = துயின்றருளுவீராக. (எ-று.)

ஆதிமூ லம்விசையற் காதிமறை யின்பொருளை
யோதி யுணர்த்தியவிவ் வுண்மையினைக் காதலுற்றுக்
கற்றோருங் கேட்டோருங் காசினியில் வாழ்ந்துமுத்தி
பெற்றோர்கண் முத்தர்பெறும் பேறு. (கo௬)

(இ-ள்.) ஆதிமூலம் = எல்லாப் பொருள்களுக்கு முதலாயும் அபின்ன நிமித்தவுபா தான காரணமாயுமுள்ள பகவான் (தான் சர்வஞ்ஞனாகவிருந்தும் பிரஹ்மவித்தை வருமாறு இதுவேயென் பதை யுலகிற்கு வற்புறுத்தும்பொருட்டு), ஆதிமறையின்பொருளை = பழமையான உபநிடதப்பொருள்களை, ஓதி = (சாந்தீபவிருடி யால்) கற்று, விசையற்கு = காண்டீபனுக்கு உணர்த்திய = உபதேசித்த, உண்மையினை = உண்மையை யுணர்த்துவதாகிய கீதாசாரமென்னு மிந்நூலினை, காதலுற்று = வேட்கையுற்று, கற்றோரும் = படித்தவர்களும், கேட்டோரும் = குருசன்னதியிலி ருந்து சிரவணம் பண்ணினவர்களும், காசினியில் வாழ்ந்து = பூமி யின்கண்ணே இன்பவாழ்க்கையைப் பொருந்தி, முத்தர் = சீவன் முத்தர்கள், பெறும்பேறு = அடையும் பயனாகிய, முத்தி = விதேக கைவல்லியமாகிய மோக்ஷத்தையும், பெற்றோர்கள் = எய்தி யவர்களாவர். (எ-று.)

கீதாசாரத் தாலாட்டு.

முற்றிற்று.

